

# சட்டமும் நீங்களும்

# ( LAW AND YOU )

# பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம்

# LAW RELATING TO MAINTENANCE APPLICATION




USAID
FROM THE AMERICAN PEOPLE

CPPHR
Centre for the Promotion and Protection of Human Rights

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல.238, உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

# சட்டமும் நீங்களும்
# (LAW AND YOU)

2

## பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம்
## LAW RELATING TO MAINTENANCE APPLICATION


சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன்

**R.THIRUKUMARANATHAN, LL.B (COL.); LL.M (COL.), ATTORNEY-AT-LAW**

## முகவுரை:

சட்டம் என்பது மக்களின் நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புடைய ஒரு விடயமாகும். எனவே மக்களுக்கு அவர்களுடைய நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புடைய சில முக்கிய சட்டங்களின் பிரதான நோக்கம் பற்றியும், அதன் மூலம் அவர்கள் பெறக்கூடிய நன்மைகள் பற்றியும் மற்றும் அத்தகைய நன்மைகளை பெறுவதற்கு அவர்கள் எத்தகைய நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் என்பவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற நன்நோக்குடன் எமது நிறுவனமான "மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்" ஊடாக சட்ட விளக்கங்கள் அடங்கிய சிறு கைநூல்களை தொடர்ச்சியாக வெளியிடவேண்டும் என்ற உன்னத நோக்கில் "சட்டமும் நீங்களும்"( **LAW AND YOU** ) எனும் தொனிப்பொருளை அடிப்படையாக கொண்டு எமது முதலாவது கைநூலை "இல்லத்து வன்முறை தடுப்பு சட்டம்" **(LAW OF PREVENTION OF DOMESTIC VIOLENCE)** எனும் தலைப்புடன் ஏற்கனவே வெளியிட்டுள்ளோம் என்பதை அறியத்தருவதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஏராளமான பிள்ளைகள் மற்றும் பெண் வாழ்க்கைத் துணைகள், ஆண் வாழ்க்கைத் துணைகளினால் கைவிடப்பட்ட நிலையில், அவர்கள் தங்களை தாங்களே பராமரிக்க இயலாதவர்களாக தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதை நாம் நாள் தோறும் காணக்கூடியதாக உள்ளது. இதன் விளைவுகள் ஒட்டு மொத்த சமூகத்திற்கும் பல்வேறு வடிவங்களில்

பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக உள்ளது என்பதையும் எம்மால் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவற்றை கருத்திற் கொண்டு இலங்கை அரசாங்கமானது ஏற்கனவே நடைமுறையில் இருந்துவந்ததும் பழைமை வாய்ந்ததுமான 1889ம் ஆண்டின் 19ம் இலக்க பராமரிப்புக் கட்டளைச்சட்டத்தை (**MAINTENANCE ORDINANCE NO: 19 OF 1889**) நீக்கிவிட்டு, பல முன்னேற்றகரமான சட்டஏற்பாடுகளை உள்ளடக்கியதாக 1999ம் ஆண்டின் 37ம் இலக்க பராமரிப்புச் சட்டத்தை (**MAINTENANCE ACT NO: 37 OF 1999**) அறிமுகப்படுத்தியுள்ளது. இச்சட்டமானது முஸ்லீம்கள் தவிர்ந்த இலங்கையில் வாழும் அனைவருக்கும் ஏற்புடையதாகும். இதுவே குடும்ப உறுப்பினர்களின் பராமரிப்புக் கோரிக்கை தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் ஆகும்.

எனவே எமது இரண்டாவது சிறு கைநூலை "பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம்" (**LAW RELATING TO MAINTENANCE APPLICATION**) எனும் தலைப்பில் வெளியிட்டு வைப்பதில் எமது நிறுவனம் மகிழ்ச்சி கொள்கின்றது. இத்தகைய சிறு கைநூல்கள் சாதாரண மக்களின் கைகளில் சென்றடைவதன் மூலம் அம்மக்கள் தங்களது குடும்ப உறுப்பினர்களின் பராமரிப்பு கோரிக்கை தொடர்பான விண்ணப்பங்களை எங்கு முன்வைப்பது? அதன் பொருட்டு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது? மற்றும் எவ்வாறான நிவாரணங்களை பெற்றுக்கொள்ளவது? என்பது தொடர்பான சட்ட அறிவினை ஓரளவிற்கேனும் பெற்றுக்கொள்வார்கள் என்பதே எமது நிறுவனத்தின் முதன்மையான எண்ணமாகும். இதன் மூலம் மக்கள் அனைவருக்கும் அதாவது "சகலருக்கும் சட்டத்தையும் மற்றும் நீதியையும் அணுகுவதற்கு சமமான வாய்ப்பு"

(EQUAL ACCESS TO LAW AND JUSTICE TO ALL) என்பது எய்தப்படுதல் ஓரளவுக்கேனும் சாத்தியம் ஆகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எமது இரண்டாவது சட்டக் கைநூல் வெளியீடான "பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம்" (LAW RELATING TO MAINTENANCE APPLICATION) எனும் தலைப்பிலான இச்சிறு கைநூலை தொடர்ந்து "பிள்ளையின் பாதுகாப்பு மற்றும் மகவேற்பு தொடர்பான சட்டம்"(LAW RELATING TO ADOPTION AND CUSTODY OF THE CHILD) எனும் தலைப்பில் அடுத்த சிறு சட்டக்கைநூல் வெளியிடப்பட இருக்கின்றது என்பதையும் எமது நிறுவனம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றது.

இச் சட்டக் கைநூலினை வாசித்துப் பயன்பெறுபவர்கள் இந்நூல் பற்றிய உங்களது அபிப்பிராயங்களையும் மற்றும் கருத்துக்களையும் எமது நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அனுப்பி வைக்கும்படி நாம் வேண்டிக்கொள்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களும் மற்றும் கருத்துக்களும் நாம் தொடர்ச்சியாக வெளியிடவுள்ள இதே போன்ற சிறு சட்டக் கைநூல்களை மேலும் சிறப்பான முறையில் வெளியிடுவதற்கு உந்துசக்தியாகவும் மற்றும் உதவியாகவும் இருக்கும் என்பதையும் நாம் இத்தால் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது இச் செயற்பாட்டிற்காக தொடர்ச்சியாக எமக்கு நிதி அனுசரணையை வழங்கிவருகின்ற USAID நிறுவனத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும்
பாதுகாப்பிற்குமான நிலையம்.

මහේස්ත්‍රාත් අධිකරණය - ත්‍රිකුණාමලය

நீதிவான் நீதிமன்றம் – திருகோணமலை

MAGISTRATE'S COURT - TRINCOMALEE

நீதிவானின் உத்தியோகபூர்வ அறை / Magistrate's Chamber - 026-2227359
நீதிவானின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் / Magistrate's Residence -
பதிவாளர் / Registrar - 026-2222291

எனது இல. / My No.
உமது இல. / Your No.
திகதி / Date 25.04.2011

## அணிந்துரை

"பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம்" என்ற இக்கைநூல் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. இரா. திருக்குமரநாதன் அவர்களால் எழுதப்பட்டு "சட்டமும் நீங்களும்" என்ற தொடரில் 2ம் வெளியீடாக வெளிவருகின்றது.

1999ம் ஆண்டின் 37ம் இலக்க தாபரிப்புச் சட்டம் சிறியதொரு சட்டமாக (Small piece of legislation) இருப்பினும் கூட திருமண உறவுகள் தொடர்பான சட்டங்களில் (Laws relating to Marriage Relationship) மிகவும் முக்கியமான ஒன்றாகும். அண்மைக் காலங்களில் கணவன் மனைவிமார்களுக்கு இடையிலான உறவுகள் விரிசலடைந்து இருவரும் பிரிந்து வாழ்கின்ற நிலமை அதிகரித்து வருவதை அவதானிக்க முடியும். இது ஒரு சமூகப் பிரச்சனையாக இருப்பினும் கூட இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும், பிள்ளைகளுமே ஆவர். இவ்வாறு பாதிக்கப்படும் நபர்கள் தமது அன்றாட வாழ்வுக்குத் தேவையான தாபரிப்பினை பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும் ஒரேயொரு சட்டமாக இச்சட்டம் அமைகின்றது. இதனால் தான் இந்த சட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது.

தாபரிப்பு தொடர்பாக நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு நடைபெறுகின்ற வழக்குகளில் மிகவும் பெரும்பாலானவற்றில்

திறத்தவர்களாக இருப்பவர்கள் படிப்பறிவு குறைந்த இளம் தம்பதியினர்கள் ஆவர். இத்தகைய நபர்களுக்கு தாபரிப்புத் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை விளக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இத்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மிகவும் எளிய மொழி நடையில் தாபரிப்புத் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை விளக்கிக் கூறுவது இக்கைநூலின் விசேட அம்சமாகும். அது மாத்திரமன்றி முஸ்லீம் சட்டத்தின் கீழான பராமரிப்புத் தொடர்பான அடிப்படை ஏற்பாடுகளையும் இக்கைநூல் சுருக்கமாக விபரிக்கின்றது. அந்த வகையில் இக்கைநூலானது சமூகத்தின் எல்லா மட்டத்தில் உள்ளவர்களுக்கும் பிரயோசனமாக அமையும் என நினைக்கின்றேன்.

மேலும் சட்டவியலில் சட்டம் பற்றிய தவறு (Mistake of Law) ஒரு பாதுகாப்பாக அமைய மாட்டாது. இதன்படி நாட்டு பிரஜைகள் அனைவரும் ஒவ்வொரு சட்டத்தையும் அறிந்திருப்பது அவசியமாகும். இந்த வகையில் மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையத்தினால் வெளியிடப்படும் "சட்டமும் நீங்களும்" என்ற தொடர் மக்களுக்கு சட்டம் பற்றிய அறிவினை எளிய நடையில் வழங்குவது பாராட்டுக்குரிய ஒன்றாகும். இத்தொடரில் மக்களின் அன்றாட பிரச்சனைகளில் நேரடியாக தொடர்புபடுகின்ற சட்டங்கள் பற்றிய விபரங்கள் தொடர்ந்தும் வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

யு.எல்.எம். அஸ்ஹர்,
நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை.

**U. L. M. AZHAR**
MAGISTRATE &
ADDITIONAL DISTRICT JUDGE
TRINCOMALEE

## "பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம்"
## (LAW RELATING TO MAINTENANCE APPLICATION)

பராமரிப்பு என்பது வாழ்க்கை துணைவருள் ஒருவர் அல்லது ஏனைய குடும்ப அங்கத்தவர்களுள் ஒருவர் அவரது நாளாந்த வாழ்க்கையை சாதாரணமான முறையில் கொண்டு நடாத்துவதற்கு தேவையான அவசியத் தேவைகளை வழங்குதல் அல்லது ஏற்பாடுகளை செய்தல் அல்லது அத்தகைய அவசியத் தேவைகளை அவர் தானாகவே பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக நிதி வசதியை வழங்குதல் என்பவற்றைக் குறிக்கின்றது.

நாளாந்த வாழ்க்கைக்கு தேவையான அவசிய தேவைகள் என்பது உணவு, உடை, உறைவிடம், சுகாதாரவசதி மற்றும் கல்விவசதி என்பவற்றை உள்ளடக்குகின்றது. இது அவரவரது வயது, பொருளாதாரவசதி மற்றும் சமூக அந்தஸ்து என்பவற்றின் அடிப்படையிலான ஒவ்வொருவரினதும் தராதரத்திற்கு ஏற்றவாறு அவரவரது பராமரிப்பின் முக்கியத்துவம் மற்றும் அதன் அளவு என்பன வேறுபடுகின்றது.

குடும்பங்களில் ஏற்படுகின்ற சிறிய அளவிலான இல்லத்து வன்முறைகள் கூட கணவன் மனைவிக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தி கணவனும் மனைவியும் வெவ்வேறு இல்லங்களில் வாழ்ந்து தமது வாழ்க்கையை நடாத்தவேண்டிய சூழ்நிலைகளை ஏற்படுத்துகின்றது. இத்தகைய பிரிவுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் கணவன், தனது மனைவியையும் மற்றும் பிள்ளைகளையும் பராமரிக்காமல் அவர்களை புறக்கணித்து நடந்து

கொள்வதையும் அதன் காரணமாக மனைவியும் பிள்ளைகளும் உளரீதியாக மற்றும் உடல்ரீதியாக பாதிக்கப்படுவதையும், இத்தகைய நிகழ்வுகள் சமூகத்தில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துவதையும் நாம் எமது நாளாந்த வாழ்க்கையில் காணக்கூடியதாக இருக்கின்றது.

கணவன், மனைவியையும் மற்றும் பிள்ளைகளையும் பராமரிக்கத் தவறும்போது, கணவனுக்கு எதிராக மனைவி பராமரிப்பு கோரிக்கை தொடர்பான வழக்கு ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தனக்கும் மற்றும் தனது பிள்ளைகளினது பாரமரிப்புக்காகவும் நீதிமன்றம் தீர்மானிக்கும் பராமரிப்புத் தொகையை கணவனிடம் இருந்து நீதிமன்றம் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே இத்தகைய பராமரிப்புக் கோரிக்கை தொடர்பான வழக்கை தாக்கல் செய்ய விரும்பும் ஒருவர், அதை எவ்வாறாக தாக்கல் செய்வது? எங்கே தாக்கல் செய்வது? எத்தகைய சூழ்நிலைகளில் அதை தாக்கல் செய்ய முடியும்? மற்றும் எத்தகைய நிவாரணங்களை பெற்றுக்கொள்ள முடியும்? என்பவை பற்றிய சட்ட விடயங்களை நன்கு அறிந்திருக்க வேண்டியது அவசியமானதாகும். எனவே இதன்பொருட்டு பராமரிப்பு கோரிக்கை வழக்குகளுக்கு ஏற்புடைத்தான தற்போது நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகள் பற்றி ஒவ்வொருவரும் ஓரளவுக்கேனும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது.

கணவன், தனது மனைவியையும் மற்றும் பிள்ளைகளையும் பராமரிக்காமல் அவர்களை புறக்கணித்து நடந்து கொள்வானாயின், அவன் தனது நியதிச்சட்டக் கடமையை (STATUTORY DUTY /

OBLIGATION) மீறுபவனாகக் கருதப்படுவான். இலங்கையில் இவ்விடயம் தொடர்பில் ஆரம்ப காலத்தில் 1889ம் ஆண்டின் 19ம் இலக்க பராமரிப்புக் கட்டளைச்சட்டம் (MAINTENANCE ORDINANCE NO: 19 OF 1889 ) நடைமுறையில் இருந்து வந்துள்ளது. ஆனால் இலங்கை அரசு, ஐக்கிய நாடுகள் சபையின் 1989ம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் சமவாயத்தை (UNITED NATIONS CONVENTION ON CHILD RIGHTS OF 1989) உறுதிப்படுத்தி அங்கீகரித்ததைத் தொடர்ந்து முன்பு நடைமுறையில் இருந்துவந்த 1889ம் ஆண்டின் 19ம் இலக்க பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தை (MAINTENANCE ORDRINANCE NO: 19 OF 1889) நீக்கிவிட்டு, பல முன்னேற்றகரமான சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக 1999ம் ஆண்டின் 37ம் இலக்க பராமரிப்புச் சட்டம் **(MAINTENANCE ACT NO: 37 OF 1999)** எனும் சட்டத்தை அறிமுகப்படுத்தி அதனை நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளது.

1999ம் ஆண்டின் 37ம் இலக்க பராமரிப்புச் சட்டத்தின் **(MAINTENANCE ACT NO: 37 OF 1999)** முகவுரையானது **(PREAMBLE)** அதன் பிரதான நோக்கம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது. “தங்களைத் தாங்களே பராமரித்துகொள்ள இயலாத பிள்ளைகளினதும், பராயம் அடைந்த வழித்தோன்றல்களினதும், ஊனமுற்ற வழித்தோன்றல்களினதும் வாழ்க்கைத் துணைகளினதும், பராமரிப்புக்கு ஏற்பாடு செய்வதற்கும் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் மீதான ஐக்கியநாடுகளின் சமவாயத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், மற்றும் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்”

எனவே பிள்ளைகளின் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தில் (UNITED NATIONS CONVENTION ON CHILD RIGHTS OF 1989) உள்ளடக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளை செயற்படுத்தும் நோக்கமாகவும் மற்றும் அச் சமவாயத்தில் காணப்படும் ஏனைய ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகப்படுவதை நோக்கமாகவும் கொண்டு 1999ம் ஆண்டின் 37ம் இலக்க பராமரிப்புச் சட்டம் (MAINTENANCE ACT NO: 37 OF 1999) இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் முன்பு நடைமுறையில் இருந்து வந்த 1889ம் ஆண்டின் 19ம் இலக்க பராமரிப்புக் கட்டளைச்சட்டத்தில் (MAINTENANCE ORDRINANCE NO: 19 OF 1889) காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளை புதிய சட்டமான 1999ம் ஆண்டின் 37ம் இலக்க பராமரிப்புச் சட்டம் (MAINTENANCE ACT NO: 37 OF 1999) ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்து இருப்பதுடன், புதிய சட்டம் பல்வேறு முன்னேற்றகரமான சட்ட ஏற்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இப்புதிய சட்டமானது, தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள இயலாத பிள்ளைகளினதும், தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாத வயது வந்த பிள்ளைகளினதும், ஊனமுற்ற பிள்ளைகளினதும் பராமரிப்பு கோரிக்கைக்கான உரிமைகள் பற்றியும் மற்றும் வாழ்க்கைத் துணைகளுள் எவரும் அதாவது கணவன் மற்றும் மனைவி இருவரும் நிலமையைப் பொறுத்து ஒருவர் மற்றவரிடத்தில் இருந்து பராமரிப்புக்கோரி வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய அவரவர்களது உரிமைகள் தொடர்பாகவும் பல்வேறு முன்னேற்றகரமான சட்ட ஏற்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

தற்காலத்தில் எமது நாட்டில் ஏராளமான முதியோர் இல்லங்கள் தோற்றம் பெற்றுள்ளமையை எம்மால் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளன. குடும்பத்தில் உள்ள ஏனைய உறுப்பினர்கள் முதியோர்களை கைவிடுதல் அல்லது அவர்களை பராமரிக்காமல் புறக்கணித்து நடந்து கொள்ளளுதல் என்பன இதற்கான அடிப்படைக் காரணங்களாக காணப்படுகின்றன. தங்களது வசதி படைத்த பிள்ளைகளிடத்தில் இருந்து அல்லது பேரப்பிள்ளைகளிடத்தில் இருந்து முதியோர்கள் பராமரிப்பினைப் பெறுவதற்கான பராமரிப்புக் கோரிக்கைகளை முன்வைக்கக்கூடியவாறு தற்போது நடைமுறையில் உள்ள 1999ம் ஆண்டின் 37ம் இலக்க பராமரிப்புச் சட்டம் (MAINTENANCE ACT NO: 37 OF 1999) எவ்விதமான ஏற்பாடுகளையும் உள்ளடக்கி இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே எதிர்காலத்தில் முதியோர்களும் சில விஷேட சூழ்நிலைகள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் இச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பராமரிப்புக் கோரிக்கையை முன்வைப்பதற்கு ஏற்றவகையில் 1999ம் ஆண்டின் 37ம் இலக்க பராமரிப்புச் சட்டத்தில் (MAINTENANCE ACT NO: 37 OF 1999) எதிர்காலத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டுவரப்படுவது அவசியமானது என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

எமது நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள முதியோர்கள் பாதுகாப்புச் சட்டத்தில் (PROTECTION OF ELDERS ACT NO: 09 OF 2000) உள்ள சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாத முதியோர்கள், தங்களது வசதி படைத்த பிள்ளைகளிடத்தில் இருந்து பராமரிப்புக்கோரி விண்ணப்பம் செய்வதற்கு சில சட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்ற போதிலும் அத்தகைய ஏற்பாடுகள் செயற்றிறன்கொண்டதாக உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

முதியோர்கள் பாதுகாப்புச் சட்டத்தில் (PROTECTION OF ELDERS ACT NO: 09 OF 2000) உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாத முதியோர்கள் தங்களது வசதிபடைத்த பிள்ளைகளிடத்தில் இருந்து பராமரிப்புக் கோரி விண்ணப்பம் செய்வதாயின் அவர்கள் அத்தகைய விண்ணப்பத்தை கொழும்பில் அமைந்திருக்கும் 'முதியோர்கள் சபைக்கு' (ELDERS BOARD) அனுப்பி வைத்தல் வேண்டும். இத்தகைய விண்ணப்பத்தை 'முதியோர்கள் சபை' பரிசீலனைக்கு எடுத்து யாருக்கு எதிராக குறித்த விண்ணப்பம் செய்யப்பட்டிருகின்றதோ, அவரது சம்மதத்துடனேயே பராமரிப்பு கோரிக்கை தொடர்பான கட்டளையை ஆக்கமுடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து வரும் பந்திகளில் 1999ம் ஆண்டின் 37ம் இலக்க பரமரிப்புச் சட்டத்தின் (MAINTENANCE ACT NO: 37 OF 1999) ஏற்பாடுகளையும் மற்றும் 1951ம் ஆண்டின் 13ம் இலக்க முஸ்லீம் விவாகம் மற்றும் விவாகரத்து கட்டளை சட்டத்தின் ஏற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்ட பராமரிப்புக் கோரிக்கை விண்ணப்ப நடவடிக்கைமுறை தொடர்பாக கேள்வி - பதில் வடிவத்தில் ஒரு விரிவான கண்ணோட்டம். பராமரிப்புச் சட்ட ஏற்பாடு என்பது இனிவரும் பந்திகளில் "ப.ச.ஏ" என குறிப்பிடப்படுகின்றது.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பராமரிப்புக் கோரிக்கை விண்ணப்பம் மற்றும் சத்தியக்கடதாசி என்பவற்றை தயாரிப்பதற்கு, சாதாரணமக்கள் வழிகாட்டியாக கொள்ளக்கூடியவாறு சில மாதிரி விண்ணப்பங்களும் மற்றும் சத்தியக்கடதாசிகளும் இப்புத்தகத்தின் இறுதிப் பகுதியில் தரப்பட்டுள்ளன.

**1. பராமரிப்பு என்றால் என்ன?**

பராமரிப்பு என்பது ஆளொருவர் தனது நாளாந்த வாழ்க்கையை சாதாரணமான முறையில் கொண்டு நடாத்துவதற்கு தேவையான அவசிய தேவைகளை வழங்குவதாகும்.

**2. நாளாந்த அவசியத் தேவைகள் என்பது எவை?**

நாளாந்த அவசியத் தேவைகள் என்பது ஆளொருவரின் நாளாந்த வாழ்க்கைக்கு தேவையான உணவு, உடை, உறைவிடம், சுகாதார வசதி மற்றும் கல்வி வசதி என்பவற்றை உள்ளடக்குகின்றது. ஆளொருவரின் பொருளாதார வசதி மற்றும் சமூக அந்தஸ்து என்பவற்றின் அடிப்படையிலான ஒவ்வொருவரினதும் தராதரத்திற்கு ஏற்றவாறு அவரவரது பராமரிப்பின் முக்கியத்துவம் மற்றும் அதன் அளவு என்பன வேறுபடுகின்றது.

**3. குடும்ப அங்கத்தவர்களின் பராமரிப்பு கோரிக்கை தொடர்பில் ஏற்புடைய சட்டம் எது?**

தற்போது எமது நாட்டில் நடைமுறையில் உள்ள 1999ம் ஆண்டின் 37ம் இலக்க பராமரிப்புச் சட்டத்தின் (MAINTENANCE ACT NO 37 OF 1999) ஏற்பாடுகளே குடும்ப அங்கத்தவர்களின் பராமரிப்பு தொடர்பில் ஏற்புடைய சட்டம் ஆகும். போதிய பொருளாதார வசதி படைத்த மனைவி, தன்னைத் தானே பராமரித்துக் கொள்வதற்கு இயலாத கணவனை பராமரிக்க தவறுவாராயின், குறித்த கணவன் தனது மனைவிக்கு எதிராக பராமரிப்புக் கோரிக்கை வழக்கு ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்வதற்கான ஏற்பாடுகளையும் இச்சட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக் கதாகும்.

**4. பராமரிப்பு தொடர்பான சட்டம் எதனை நோக்கமாக கொண்டுள்ளது?**

தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள இயலாதவர்களாகிய பிள்ளைகளினதும், வயதுவந்த பிள்ளைகளினதும் (பராயமடைந்த வழித்தோன்றல் களினதும் - ADULT OFFSPRING), ஊனமுற்ற வயதுவந்த பிள்ளைகளினதும் (ஊனமுற்ற வழித்தோன்றல்களினதும - DISABLED OFFSPRING), பராமரிப்பு கோரிக்கைகளை முன்வைப்பதற்கான அவரவர்களது உரிமைகளையும் மற்றும் தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள இயலாத வாழ்க்கைத் துணைகளில் (கணவன் - மனைவி) ஒருவர் மற்றவரிடம் இருந்து பராமரிப்பு கோரிக்கைகளை முன்வைப்பதற்கான அவர்களது உரிமைகளையும் அதன் பொருட்டு அவர்கள் பின்பற்றவேண்டிய நடவடிக்கை முறைகளையும் மற்றும் நீதிமன்றம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை முறைகளையும் எடுத்துரைப்பதை நோக்கமாக கொண்டதாகும்.

**5. முதியோர்களின் பராமரிப்பு கோரிக்கை தொடர்பில் ஏற்புடைய சட்டம் எது?**

2000ம் ஆண்டின் 09ம் இலக்க முதியோர்கள் பாதுகாப்புச் சட்டத்தில் (PROTECTION OF ELDERS ACT NO: 09 OF 2000) உள்ள ஏற்பாடுகளே ஏற்புடைய சட்டம் ஆகும். முதியோர்கள் தங்களது வசதிபடைத்த பிள்ளைகளிடத்தில் இருந்து

பராமரிப்புக்கோரி விண்ணப்பம் செய்வதாயின் அவர்கள் அத்தகைய விண்ணப்பத்தை கொழும்பில் அமைந்திருக்கும் 'முதியோர்கள் சபைக்கு' அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலும் 2005 ஆம் ஆண்டின் 34ம் இலக்க இல்லத்து வன்முறை தடுப்புச்சட்டத்தின் (PREVENTION OF DOMESTIC VIOLENCE ACT NO: 34 OF 2005) ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சில விஷேட சூழ்நிலைகளில், குடும்ப அங்கத்தவர்கள் முதியோர்கள் உட்பட, தற்காலிக பராமரிப்பு கோரிக்கைகளை முன்வைக்கமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**6. கொழும்பில் அமைந்திருக்கும் 'முதியோர்கள் சபை' இன் முகவரி என்ன?**

**''முதியோர்கள் சபை',**
**தேசிய முதியோர் செயலகம்,**
**இல: 150, நாவல வீதி,**
**நுகேகொட.**

**7. 1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பராமரிப்புச் சட்டம் யாருக்கு ஏற்புடையது?**

முஸ்லீம்கள் தவிர்ந்த இலங்கையில் வாழும் ஏனைய அனைவருக்கும் ஏற்புடையதாகும். முஸ்லீம்களின் பராமரிப்பு விடயம் தொடர்பில் 1951ம் ஆண்டின் 13ம் இலக்க முஸ்லீம் விவாகம் மற்றும் விவாகரத்து கட்டளை சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும

**8. பராமரிப்புக் கோரிக்கை தொடர்பான விண்ணப்பத்தை எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்?**

விண்ணப்பதாரி எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் வசிக்கின்றாரோ அந்த நீதிவான் நீதிமன்றத்தில், அல்லது

எந்த ஆள் தொடர்பில் அல்லது எந்த ஆளுக்கு எதிராக அத்தகைய பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்த ஆள் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் வசிக்கின்றாரோ அந்த நீதிவான் நீதிமன்றத்தில்,

குறித்த பராமரிப்பு கோரிக்கை தொடர்பான விண்ணப்பமொன்று தாக்கல் செய்யப்படல் வேண்டும் - ப.ச.ஏ பிரிவு 4(2).

**9. பராமரிப்பு சட்டத்தின் கீழ் பராமரிப்பை கோருவதற்கு உரித்துடையவர்கள் யாவர்?**

- பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகள்,
- பெற்றோர்களிடமிருந்து தங்களைத் தாங்களே பராமரித்துகொள்ள இயலாத வயதுவந்த பிள்ளைகள்,
- பெற்றோர்களிடமிருந்து தங்களைத் தாங்களே பராமரித்துகொள்ள இயலாத வயதுவந்த இயலாமைப் பிள்ளைகள், மற்றும்
- ஒரு வாழ்க்கைத் துணையிடமிருந்து மற்றைய வாழ்க்கைத் துணை ஆகியோர் பராமரிப்பை கோரி விண்ணப்பம் செய்வதற்கு உரித்துடையவர்கள் - ப.ச.ஏ பிரிவு 4(2).

**10. எத்தகைய சந்தர்ப்பங்களில் ஒரு வாழ்க்கை துணை மற்றைய வாழ்க்கை துணையிடம் இருந்து பராமரிப்பை கோர முடியாது?**

ஒரு வாழ்க்கைத்துணை தன்னைத் தானே பராமரிக்கக் கூடிய பொருளாதார வசதிகளுடன் வாழ்ந்து வருகின்ற சந்தர்ப்பத்தில்.

வாழ்க்கைத்துணை இருவருக்கும் இடையில் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய திருமணம் எதுவும் நடைபெற்றிருக்காத சந்தர்ப்பத்தில்.

ஒரு வாழ்க்கைத்துணை சோர வாழ்க்கை (ADULTERY LIFE) நடாத்திவருகின்ற சந்தர்ப்பத்தில்.

வாழ்க்கைத்துணை இருவரும் தங்களுக்கிடையிலான சம்மதத்தின் பேரில் பிரிந்து வாழ்ந்து வருகின்ற சந்தர்ப்பத்தில்.

வாழ்க்கைத்துணை இருவருக்கும் இடையிலான திருமணத்தின் மீது நீதிமன்ற தீர்ப்பு ஒன்றின் மூலம் விவாகரத்து வழங்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் - ப.ச.ஏ பிரிவு 2(1).

**11. பராமரிப்புச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிள்ளை (CHILD) எனும் சொல்லின் கருத்து என்ன?**

பராமரிப்புச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் குழந்தை ஒன்று பிறந்ததில் இருந்து 18 வயது பூர்த்தியாகும் வரையில் அவன் அல்லது அவள் பிள்ளை என கருதப்படுவர் - ப.ச.ஏ பிரிவு 22.

## 12. பிள்ளையொன்று பராமரிப்பு கோரக்கூடிய ஆகக்கூடிய வயதெல்லை யாது?

- ஒரு பிள்ளை 18 வயதை பூர்த்தி அடையும் வரை தனது பெற்றோரிடமிருந்து பராமரிப்பை கோரமுடியும்.

- பெற்றோர்கள் போதிய பொருளாதார வசதிகளைக் கொண்டிருகின்ற போதும் மற்றும் பெற்றோர் பொருளாதார வசதியினை தேடிப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்ற போதும், அவர்களுடைய வயது வந்த பிள்ளையானது (ADULT OFFSPRING), தன்னைத்தானே பராமரிக்க இயலாதநிலையில் உள்ளபோது, பெற்றோர்கள் அப்பிள்ளையை பராமரிக்கும் கடப்பாட்டை கொண்டிருப்பதனால் 25 வயதை பூர்த்தி அடையும் வரையில் அப்பிள்ளை பெற்றோர்களிடம் இருந்து பராமரிப்பை கோரமுடியும்.

- பெற்றோர்கள் போதிய பொருளாதார வசதிகளை கொண்டிருகின்ற போதும் மற்றும் பெற்றோர் பொருளாதார வசதியினை தேடிப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்ற போதும் வயது வந்த ஊனமுற்ற பிள்ளையை (DISABLED OFFSPRING) வயது மட்டுப்பாடு எதுவும் இன்றி தொடர்ச்சியாக பராமரிக்கும் கடப்பாட்டை கொண்டிருப்பதனால் அப்பிள்ளை தனது வாழ்நாள் முவதும் பெற்றோர்களிடம் இருந்து பராமரிப்பை கோரமுடியும் - ப.ச.ஏ பிரிவு 22.

**13. மணம்சாராத பிள்ளை (NON MARITAL) என்றால் என்ன?**

குறித்த பிள்ளையின் பெற்றோர் இருவருக்கும் இடையில் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய திருமணம் எதுவும் நடைபெற்றிருக்காத சந்தர்பத்தில் பிறக்கும் பிள்ளை மணம்சாரா பிள்ளை (NON MARTIAL) என அழைக்கப்படும் - ப.ச.ஏ பிரிவு 22.

**14. பராமரிப்பு விண்ணப்பம் ஒன்றை செய்யும் போது எத்தகைய விடயங்களை உள்ளடக்க வேண்டும்?**

மனுதாரரின் பெயர், முகவரி, எதிர்மனுதாரரின் பெயர் முகவரி, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவருக்கிடையில் இடம்பெற்ற திருமணத்தின் விபரம், பிள்ளை பிறந்த காலப்பகுதி, எதிர்மனுதாரரின் பொருளாதார நிலைமை, எதிர்மனுதாரருக்கு கிடைக்கப்பெறும் மாதாந்த வருமானம் அல்லது உழைப்பின் அளவு, எக்காலப்பகுதியில் இருந்து எதிர்மனுதாரர், மனுதாரரை பராமரிக்கத் தவறியுள்ளார் என்பது பற்றிய விபரம் மற்றும் மனுதாரர் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் கோருகின்ற நிவாரணங்கள் என்பன பற்றி மனுவில் அல்லது விண்ணப்பத்தில் விபரமாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**15. பராமரிப்பு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் எவை?**

திருமணப் பதிவுச் சான்றிதழ், பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ், சமயமுறைப்படி திருமணம் நடைபெற்று

இருப்பின் அதை உறுதிப்படுத்தி மதகுருவினால் வழங்கப்பட்ட சான்றிதழ், கடிதம் அல்லது சத்தியக் கடதாசி மற்றும் மனுவில் கூறப்பட்டுள்ள நிகழ்வு களை உறுதிப்படுத்தும் சத்தியக்கடதாசி என்பவற் றை பராமரிப்பு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**16. பராமரிப்பு விண்ணப்பம் ஒன்றை செய்யும் ஒருவர் நீதிமன்றித்திடம், வழக்கின் ஆரம்ப கட்டத்தில் இடைக்காலக்கட்டளை ஒன்றை (AN INTERIM ORDER) வழங்குமாறு கோரமுடியுமா?**

ஆம். மனுதாரரினதும் பிள்ளைகளினதும் அவசிய தேவைகளை கருத்திற்கொண்டு வழக்கின் ஆரம்ப நிலையிலேயே ஒரு குறிப்பிட்ட தொகையை மனுதாரருக்கு பராமரிப்புத் தொகையாக செலுத்தும் படி எதிர்மனுதாரருக்கு கட்டளையிட்டு நீதிமன்றம் இடைக்காலக்கட்டளை ஒன்றை **(AN INTERIM ORDER)** வழங்க முடியும்.

**17. இத்தகைய இடைக்கால கட்டளை ஒன்று (AN INTERIM ORDER) எவ்வளவு காலத்திற்கு செயற்பாட்டில் இருக்கும்?**

நீதிமன்றம் பராமரிப்பு கோரிக்கை தொடர்பான குறித்த விண்ணப்பத்தின் மீதான விசாரணையை மேற்கொண்டு இறுதிக் கட்டளை வழங்கப்படும் காலப்பகுதி வரையில் இத்தகைய இடைக்கால கட்டளை ஒன்று **(AN INTERIM ORDER)** செயற்பாட்டில் இருக்கும். இத்தகைய இடைக்கால கட்டளை எதிர்மனுதாரரைக் கட்டுப்படுத்தும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**18. இல்லத்து வன்முறை சட்டத்தின் கீழ் வழக்கொன்றை தாக்கல் செய்து அதன் மூலம் பராமரிப்பு தொடர்பான கட்டளையை பெற்றுள்ள ஒருவர், அக்கட்டளை நடைமுறையில் இருக்கையில் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் பராமரிப்புக் கோரி புதிய வழக்கொன்றை தாக்கல் செய்ய முடியுமா?**

ஆம். இல்லத்து வன்முறை சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் வழங்கப்படும் பராமரிப்பு நிவாரணம் ஒரு தற்காலிக ஏற்பாடாக ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்கே மட்டுமே வழங்கப்படுகின்றது. எனவே பராமரிப்புச் சட்டத்தின் கீழ் புதிய வழக்கொன்றை தாக்கல் செய்து பராமரிப்பு தொடர்பாக நிரந்தரமான நிவாரணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

**19. பிள்ளையின் தாய் இறந்திருப்பின் அல்லது தாய் பிள்ளையை கைவிட்டிருப்பாராயின் அத்தகைய சந்தர்ப்பங்களில் பிள்ளையின் சார்பில் பராமரிப்புக் கோரிக்கை தொடர்பான விண்ணப்பத்தை யார் தந்தைக்கெதிராக நீதிமன்றில் தாக்கல் செய்ய முடியும்?**

பிள்ளை தானாகவே நீதிமன்றில் விண்ணப்பத்தை தந்தைக்கெதிராக தாக்கல் செய்ய முடியும் அல்லது பிள்ளை யாருடைய பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் உள்ளதோ அவர் பிள்ளையின் சார்பாக பிள்ளையின் தந்தைக்கெதிராக நீதிமன்றில் அத்தகைய விண்ணப்பத்தை தாக்கல் செய்ய முடியும்.

**20. பெற்றோர்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்ற சந்தர்ப்பங்களில், யார் பிள்ளையின் பராமரிப்பை மேற்கொள்ளும் கடப்பாடடைக் கொண்டுள்ளார்கள்?**

பெற்றோர்கள் இருவரும் பிள்ளையின் பராமரிப்பை மேற்கொள்ள வேண்டிய நியதிச்சட்டக் கடமையை/ கடப்பாட்டைக் (STATUTORY DUTY / OBLIGATION) கொண்டுள்ளார்கள்.

பிள்ளை தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள முடியாத நிலையிலும் மற்றும் பொருளாதாரவசதி அற்ற நிலையிலும் இருக்கும்போது, பிள்ளை பராமரிப்பைக்கோரி, பெற்றோர்கள் இருவருக்கும் எதிராக நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பம் செய்யமுடியும்.

**21. பிள்ளை தானாகவே நேரடியாக பராமரிப்பு கோரிக்கை தொடர்பான விண்ணப்பம் ஒன்றை செய்ய முடியுமா?**

ஆம். பிள்ளை தானாகவே நீதிமன்றில் விண்ணப்பத்தை தந்தைக்கெதிராக தாக்கல் செய்ய முடியும் அல்லது அப்பிள்ளை யாருடைய பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் உள்ளதோ அவர் அப்பிள்ளையின் சார்பில் பராமரிப்புக் கோரிக்கை தொடர்பான விண்ணப்பம் ஒன்றைச் செய்யமுடியும். தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள இயலாத நிலையில் வாழ்கின்ற 18 வயதிற்கு மேற்பட்ட ஆனால் 25 வயதை பூர்த்தியடையாத,

வயதுவந்த பிள்ளைகள் (ADULT OFFSPRING) தாங்களாகவே நேரடியாக நீதிமன்றத்தில் இத்தகைய விண்ணப்பம் ஒன்றைச் செய்யமுடியும்.

தங்களைத் தாமே பராமரித்துக்கொள்ள இயலாத நிலையில் வாழ்கின்ற 18 வயதிற்கு மேற்பட்ட வயதுவந்த இயலாமைப் பிள்ளைகளும் (DISABLED OFFSPRING), தாங்களாகவே நேரடியாக இத்தகைய விண்ணப்பம் ஒன்றைச் செய்யமுடியும் அல்லது அவன் அல்லது அவள் யாருடைய பாதுகாப்பிலும் பராமரிப்பலும் உள்ளனரோ, அவர் அத்தகைய விண்ணப்பத்தை நீதிமன்றத்தில் செய்யமுடியும் - ப.ச.ஏ பிரிவு 4(1) (அ).

**22. பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பில் நீதிமன்றில் விசாரணை இடம்பெறும் போது விண்ணப்பதாரர் எத்தகைய சாட்சியங்களை சமாப்பிக்க வேண்டும்?**

தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளை உறுதிப்படுத்தும் வகையில் வாய்மூலமான சாட்சியங்கள் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஆவணச்சான்றுகள் என்பவற்றை சமர்ப்பிக்கலாம்.

**23. பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பிலான விசாரணையின் இறுதியில் நீதிமன்றம் எத்தகைய கட்டளைகளை ஆக்கும்?**

விசாரணையின் இறுதியில் நீதிமன்றம் தன் முன்னுள்ள சான்றுகளின் அடிப்படையில் மனுதார ரை, எதிர்மனுதாரர் பராமரிக்க தவறியுள்ளார்

மற்றும் மனுதாரரை, எதிர்மனுதாரர் தொடர்ந்தும் பராமரிக்கும் கடப்பாட்டைக் கொண்டுள்ளார் என்பவற்றையிட்டு திருப்திப்பட்டால், எதிர்மனுதாரரை குறிப்பிட்டளவு பராமரிப்பு தொகையை மனுதாரருக்கு செலுத்தும்படி நீதிமன்றம் கட்டளையை ஆக்கும்.

## 24. பராமரிப்புக் கட்டளை என்றால்?

பெற்றோரினால் பிள்ளை பராமரிக்கப்படாத சூழ்நிலைகளில், அத்தகைய பெற்றோர் காலத்துக்கு காலம் ஒரு குறிப்பிட்ட தொகையை பிள்ளைக்கு செலுத்தவேண்டும் என பெற்றோரை கட்டாயப்படுத்தும் கட்டளை ஒன்றை நீதிமன்றம் பிறப்பிக்கும். இதுவே பராமரிப்புக் கட்டளை என அழைக்கப்படுகின்றது.

நீதிமன்றம் பராமரிப்புக் கட்டளையை, திருமண பந்தம் நடைமுறையில் இருக்கும் போது பிறந்த பிள்ளை தொடர்பிலும் மற்றும் திருமணபந்தம் நடைமுறையில் இல்லாத நிலையில் பிறக்கும் பிள்ளை தொடர்பிலும் பிறப்பிக்கும்.

ஆனால் சட்டரீதியான திருமணபந்தம் நடைமுறையில் இல்லாமல் பிறக்கும் குழந்தை தொடர்பில், எதிர்மனுதாரரே குழந்தையின் தந்தை என உறுதியான சான்றுகள் மூலம் அல்லது DNA பரிசோதனையின் மூலம் உறுதி செய்யப்பட்டு தந்தைமை (PATERNITY) எண்பிக்கப்படல் வேண்டும்.

தந்தைமை (PATERNITY) அவ்வாறாக எண்பிக்கப்பட்டு உள்ளதென நீதிமன்றம் திருப்திப்படும் சந்தர்ப்பத்திலும் அல்லது குழந்தைக்கு தானே தந்தை என எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்ளுகின்ற

சந்தர்ப்பத்திலும் சட்டரீதியான திருமணபந்தம் இல்லாத நிலையில் பிறக்கும் குழந்தை தொடர்பிலும் நீதிமன்றம் பராமரிப்புக் கட்டளையைப் பிறப்பிக்கும்.

**25. நீதிமன்றத்தினால் பராமரிப்புத் தொகையின் அளவு எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது?**

எவரிடம் இருந்து பராமரிப்பு கோரப்படுகின்றதோ அந்த ஆளின் மாதாந்த வருமானம் மற்றும் அவரது பொருளாதார வசதி எனபவற்றினையும் மற்றும் யார் பராமரிப்பை கோருகின்றாரோ அவரது பராமரிப்புக்கு அவசியமான தேவைகள் மற்றும் அவரது அந்தஸ்து என்பவற்றையும் கருத்திற் கொண்டு நீதிமன்றம் பராமரிப்புத் தொகையின் அளவைத் தீர்மானிக்கும்.

**26. பராமரிப்பு விண்ணப்பம் ஒன்றில் எதிர் மனுதார ராக அரசாங்க ஊழியர் ஒருவர் இருப்பாராயின் அவரது ஊதியத்திலிருந்து நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்ட பராமரிப்பு தொகையை செலுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப் புரை வழங்கப்பட முடியுமா?**

ஆம். பராமரிப்பு தொகையைக் செலுத்துவதற்கு மறுக்கும் எதிர் மனுதாரரின் சம்பளத்தை தடை செய்வதற்கு நீதிவானினால் கட்டளை பிறப்பிக்க முடியும்.

தொழில் வழங்குநரை, உரிய பராமரிப்பு தொகைப் பணத்தை எதிர்மனுதாரரின் சம்பளத்திலிருந்து கழித்து, அத்தொகையை நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கும்படியோ அல்லது வேறு பொருத்தமான கட்டளையையோ பராமரிப்புச் சட்ட ஏற்பாடுகளுக்கு

அமைய நீதிவானினால் பிறப்பிக்கமுடியும் - ப.ச.ஏ பிரிவு 6.

**27. கணவன் எந்த விதமான நியாயமான காரணமும் இன்றி நீதிமன்றின் கட்டளைப்படி மனைவிக்கு செலுத்த வேண்டிய மாதாந்த பராமரிப்புத் தொகையை செலுத்த தவறியிருப்பின் நீதிமன்றம் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளும்?**

பராமரிப்பு பணத்தைக் கட்டுவதற்கு தவறும் எதிர்மனுதாரருக்கு எதிராக, அத்தொகையை தண்டப்பணமாக அறவிடும்பொருட்டு பிடியாணை பிறப்பிக்க நீதிவானுக்கு அதிகாரம் உண்டு. மேலும் குறித்த நிலுவைத் தொகையை தண்டப்பணமாகச் செலுத்தத் தவறும்பட்சத்தில், ஒவ்வொருமாத நிலுவைத் தொகைக்கும் தலா ஒவ்வொரு மாதம் வீதம் நீதிமன்றினால் எதிர்மனுதாரருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படமுடியும் - ப.ச.ஏ பிரிவு 6.

**28. பிள்ளைகளுக்கு பராமரிப்பு செலுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிட்டிருந்த போதிலும், தாய் அல்லது தகப்பன் பராமரிப்பை செலுத்த தவறியிருப்பின், நீதிமன்றம் என்ன நடவடிக்கை யை மேற்கொள்ளும்?**

அப்பிள்ளை எவருடைய பாதுகாப்பில் இருக்கின்றானோ அவர், பெற்றோரினால் பராமரிப்பு பணத்தினை செலுத்தத் தவறியுள்ளமை பற்றி நீதிமன்றிற்கு அறிவிக்க வேண்டும். இது தொடர்பில் நீதிமன்றம் விசாரணையொன்றினை மேற்கொண்டு குறித்த பெற்றோரை அக்கொடுப்பனவை செலுத்துமாறு மீண்டும் கட்டளையிடும். பராமரிப்பு

பணத்தைக்கட்டுவதற்கு தவறும் எதிர்மனுதாரருக்கு எதிராக அத்தொகையை தண்டப்பணமாக அறவிடும் பொருட்டு பிடியாணை பிறப்பிக்க நீதிவானுக்கு அதிகாரம் உண்டு.

குறித்த பெற்றோர் இருமாதங்களுக்கு மேலாக பராமரிப்பு பணத்தினை செலுத்த தவறியிருப்பதுடன் குறித்த பெற்றோர் அரசாங்க அல்லது தனியார் நிறுவனங்களில் தொழில் புரிபவர்களாயும் இருப்பின் அவர்களின் சம்பளத்திலிருந்து அத்தொகையை கழித்து அதனை அப்பிள்ளைக்கு நேரடியாக செலத்துமாறு நீதிவான் கட்டளையிடமுடியும் - ப.ச.ஏ பிரிவு 5.

**29. பராமரிப்பு தொகை செலுத்துமாறு வழங்கப் பட்டுள்ள நீதிமன்றின் முன்னைய பராமரிப்பு கட்டளையை, பின்னர் அதே நீதிமன்றினால் மாற்றமுடியுமா?**

பராமரிப்புக் கட்டளை நீதிமன்றினால் பிறப்பிக் கப்பட்ட பின்னர் ஒரு வாழ்க்கைத் துணை, சோர வாழ்க்கையை (ADULTERY LIFE) நடாத்தி வருவாரா யின், மற்றைய வாழ்க்கை துணை பராமரிப்பு செலுத்தும்படி தனக்கெதிராக இடப்பட்ட கட்டளை யை நீக்குமாறு கோரி நீதிமன்றுக்கு விண்ணப்பம் செய்யமுடியும் - ப.ச.ஏ பிரிவு 8.

அதேபோன்று வயதுவந்த பிள்ளைக்கு போதிய ளவு வருமானம் மற்றும் பொருளாதார வசதி உண்டென்பதை எண்பித்து, தாய் அல்லது தந்தை எவரேனும் ஒருவர் அவருக்கெதிராக பராமரிப்பு செலுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட முன்னைய

கட்டளையை இரத்துச் செய்யும்படி அல்லது மாற்றியமைக்கும்படி நீதிமன்றத்தைக்கோர முடியும்.

**30. நீதிவான் நீதிமன்றின் கட்டளைக்கெதிராக மேன் முறையீடு செய்ய முடியுமா?**

நீதிவான் நீதிமன்றத்தின் பராமரிப்பு கட்டளையில் திருப்தியடையாத எந்த ஒரு நபரும் அதற்கெதிராக மேன்முறையீடு செய்ய முடியும் - ப.ச.ஏ பிரிவு 14.

**31. அவ்வாறு மேன்முறையீடு செய்வதாயின் எந்த நீதிமன்றிற்கு மேன்முறையீடு செய்ய வேண்டும்?**

மாகாண மேல்நீதிமன்றிற்கு மேன்முறையீடு செய்ய வேண்டும் - ப.ச.ஏ பிரிவு 14.

**32. அத்தகைய மேன்முறையீட்டை எத்தனை நாட்க ளுக்குள் செய்ய வேண்டும்?**

நீதவான் நீதிமன்றினால் இறுதிக் கட்டளை வழங்கப் பட்ட தினத்தில் இருந்து பதினான்கு நாட்க ளுக்குள் அந்தக் கட்டளைக்கு எதிராக மாகாண மேல் நீதிமன்றிற்கு மேன்முறையீடு (APPEAL) செய்தல் வேண்டும்.

நீதவான் நீதிமன்றினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக மீளாய்வு விண்ணப்பம் ஒன்றை செய்வ தாயின், அக்கட்டளை வழங்கப்பட்ட தினத்தில் இருந்து நியாயமான காலப்பகுதிக்குள் அந்தக் கட்டளைக்கு எதிராக மாகாண மேல் நீதிமன்றிற்கு அத்தகைய மீளாய்வு விண்ணப்பத்தைச் (REVISION APPLICATION) செய்தல் வேண்டும்.

**33. பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பம் செய்ய விரும்பும் ஒருவர் குறித்த விண்ணப்பத்தை சட்டத்தரணி ஒருவர் மூலம் செய்ய வேண்டும் என்ற கட்டாயமான தேவைப்பாடு எதுவும் உண்டா?**

சட்டத்தரணி ஒருவர் மூலம் விண்ணப்பம் செய்ய வேண்டும் என்ற கட்டாயமான தேவைப்பாடு எதுவும் இல்லை. ஒருவர் அத்தகைய விண்ணப்பத்தை தான் நேரடியாக அல்லது சட்டத்தரணி ஒருவர் மூலம் நீதிமன்றில் சமர்ப்பிக்க முடியும்.

**34. கணவன், தனது மனைவியிடமிருந்து பராமரிப்பு கோருவதற்கு உரித்துடையவனா?**

ஆம், கணவன் தன்னைத்தானே பராமரித்து கொள்ளக்கூடிய வசதியற்றவனாக அல்லது இயலாத வனாக இருப்பானாயின் அத்தகைய சந்தர்ப்பத்தில், மனைவி போதிய பொருளாதார வசதியுடன் இருந்து கொண்டு தன்னுடைய கணவனைப் பராமரிக்க தவறுவாளாயின் கணவன், தனது மனைவியிட மிருந்து பராமரிப்பைக் கோருவதற்கு உரித்து உடையவன்.

**35. முதியோரான பெற்றோர் அவர்களது பிள்ளைகளிடமிருந்து பராமரிப்பை கோர முடியுமா?**

ஆம், தன்னைத்தானே பராமரிக்க முடியாத நிலையிலுள்ள பெற்றோர் ஒருவர் போதிய

பொருளாதார வசதிகளுடன் வாழுகின்ற தமது பிள்ளைகளிடமிருந்து பராமரிப்புக்கோரி 2000ம் ஆண்டின் 09ம் இலக்க முதியோர் பாதுகாப்புச் சட்ட (PROTECTION OF ELDERS ACT NO: 09 OF 2000) ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பம் ஒன்றை செய்ய முடியும். ஆனால் பராமரிப்பு சட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் எவ்விதமான ஏற்பாடுகள் எதுவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும் முதியோரான வாழ்க்கைத்துணை ஒருவர் பராமரிப்புச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றைய வாழ்க்கைத்துணையிடமிருந்து பராமரிப்புக் கோரி நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பம் ஒன்றை செய்ய முடியும்.

**36. முதியோர்கள் பராமரிப்புக் கோரி விண்ணப்பம் செய்வதாயின் எங்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்?**

2000ம் ஆண்டின் 09ம் இலக்க முதியோர் பாதுகாப்புச் சட்ட (PROTECTION OF ELDERS ACT NO: 09 OF 2000) ஏற்பாடுகளுக்கு அமைய, கொழும்பில் செயற்படுகின்ற முதியோர் சபைக்கு அவ்விண்ணப்பத்தை நேரடியாக சமர்ப்பிக்க முடியும் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும்.

**37. மகவேற்பு செய்யப்பட்ட பிள்ளையொன்று (ADOPTED CHILD) பராமரிப்புக்கோரி விண்ணப்பம் செய்யமுடியுமா?**

ஆம். மகவேற்புப் (தத்தெடுத்த) பெற்றோரிடமிருந்து (ADOPTED PARENTS) பராமரிப்பை கோரமுடியும்.

மகவேற்பு பெற்றோர் இருவரிடமிருந்தும் பராமரிப்பை பெற்றுக்கொள்ளமுடியும்.

**38. நீதிமன்றின் பராமரிப்பு கட்டளையின் அடிப்படையில் பராமரிப்பு பணத்தினை செலுத்துவதற்காக ஒருவர் நீதிமன்றிற்கு சமூகளிக்க வேண்டியது கட்டாயமானதா?**

இல்லை. அவர் தன்சார்பாக வேறொருவரை நீதிமன்றிற்கு அனுப்பி அப்பராமரிப்புப் பணத்தினை செலுத்தலாம் அல்லது நீதிமன்றின் அனுமதியின் பேரில் தபால் மூலம் காசுக் கட்டளையாகவோ அல்லது வங்கியின் மூலமாகவோ விண்ணப்பகாரருக்கு நேரடியாகச் செலுத்தலாம்.

**39. குடியியல் நீதிமன்றில் விவாகரத்து வழக்கொன்றில் நிரந்தர பிரிமனை பணம் (PERMANENT ALIMONY) கோருவதை, நீதிவான் நீதிமன்றினால் வழங்கப்பட்ட பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான கட்டளை தடை செய்கின்றதா?**

இல்லை. மாவட்ட நீதிமன்றினால் விவாகரத்தை அனுமதித்து தீர்ப்பு வழங்கப்பட்ட காலப்பகுதியில் இருந்து ஒரு வாழ்கைத்துணையிடம் இருந்து மற்ற வாழ்கைத்துணை பராமரிப்பை பெறும் உரிமையை இந்துவிடுகின்றார். எனவே குடியியல் நீதிமன்றில் விவாகரத்து வழக்கொன்றில் நிரந்தர பிரிமனை பணம் (PERMANENT ALIMONY) கோருமுடியும்.

**40. பராமரிப்பு விண்ணப்பத்திற்கு அல்லது குறித்த விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களுக்கு முத்திரை வரி செலுத்தப்பட வேண்டுமா?**

பராமரிப்பு சட்டத்தின் பிரிவு 10 இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் முத்திரை வரி செலுத்தப்பட வேண்டியதில்லை.

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவினால் கட்சிகள்காரர்கள் சார்பாக தாக்கல் செய்யப்படுகின்ற எந்தவொரு வழக்கிற்கும் முத்திரை வரி செலுத்தப்பட வேண்டியதில்லை.

**41. மாகாண மேல்நீதிமன்றினால் வழங்கப்படும் மேன்முறையீட்டின் மீதான தீர்ப்பினையிட்டு திருப்தியடையாத திறத்தவர்கள் எவரேனும் அத்தீர்ப்புக்கெதிராக மேலும் மேன்முறையீடு செய்யமுடியுமா?**

ஆம், மாகாண மேல்நீதிமன்றத்தின் அனுமதியுடன் சட்டப்பிரச்சனை ஒன்றின் மீது மாகாண மேல்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யமுடியும்.

மாகாண மேல்நீதிமன்றம் அத்தகைய அனுமதியை மறுக்குமாயின், உயர் நீதிமன்றத்தின் சிறப்பு அனுமதியைப் பெற்றுக் கொண்டு உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யமுடியும்.

**42. மாகாண மேல் நீதிமன்றிற்கான மேன்முறையீடு (APPEAL) மற்றும் மீளாய்வு (REVISION) தொடர்பில், மனுதாரர் அல்லது எதிர்மனுதாரர் இலவச சட்ட உதவியைப் பெற்றுக்கொள்ள முடியுமா?**

ஆம். திருகோணமலை மாவட்டத்தில் செயற்படுகின்ற சட்ட உதவி நிறுவனங்களிடம் இருந்து, மனுதாரர் அல்லது எதிர்மனுதாரர் திருகோணமலை மாகாண மேல்நீதிமன்றின் முன்னிலையில் வருகின்ற மேன்முறையீட்டு விண்ணப்பம் (PETITION OF APPEAL ) மற்றும் மீளாய்வு விண்ணப்பம் (REVISION APPLI - CATION) தொடர்பாகவும் இலவச சட்ட உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**43. உயர் நீதிமன்றத்துக்கு செய்யப்படுகின்ற மேன்முறையீடு (APPEAL) தொடர்பிலும், மனுதாரர் அல்லது எதிர்மனுதாரர் இலவச சட்ட உதவியைப் பெற்றுக் கொள்ள முடியுமா?**

ஆம். சகல மாவட்டங்களிலும் செயற்படுகின்ற சட்ட உதவி நிறுவனங்களிடம் இருந்தும் அத்தகைய மேன்முறையீடு (APPEAL) தொடர்பிலும், மனுதாரர் அல்லது எதிர்மனுதாரர் இலவச சட்ட உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**44. பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பிலான கட்டளைக்கு அல்லது தீர்ப்புக்கு எதிரான மேன் முறையீடுகள் தொடர்பில் ஏற்படும் செலவுகளை திறத்தவர்கள் செலுத்த வேண்டுமா?**

இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றம் ஒவ்வொரு வழக்கினதும் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு செலவுதொகை வழங்கப்படவேண்டுமா அல்லவா என்பது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ளும்

திறத்தவர் ஒருவர் மறு திறத்தவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை செலவு தொகையாக செலுத்தவேண்டுமென மாகாண மேல்நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பின் அத்தொகை செலவுதொகையாக செலுத்தப்படல் வேண்டும்.

மேன்முறையீட்டு விண்ணப்பமொன்றை திறத்தவர் ஒருவர் கையுதிர்ப்பாராயின் நீதிமன்றம் விடயத்துக்கேற்றவாறு செலவு தொகையைச் செலுத்துமாறு திறத்தவர்களுக்கு கட்டளையிடலாம் - ப.ச.ஏ பிரிவு 16.

**45. நீதவான் நீதிமன்றில் செய்யப்படும் பராமரிப்பு கோரிக்கையை அடிப்படையாகக் கொண்ட எந்த ஒரு விண்ணப்பம் தொடர்பிலும், மனுதாரர் அல்லது எதிர்மனுதாரர் இலவச சட்ட உதவி யைப் பெற்றுக்கொள்ள முடியுமா?**

ஆம், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பின்வரும் சட்ட உதவி நிறுவனங்களிடம் இருந்து மனுதாரர் அல்லது எதிர்மனுதாரர் இலவச சட்ட உதவியை பெற்றுக்கொள்ள முடியும்:

- **மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும்
பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல: 238, உட்துறைமுக வீதி,
திருக்கோணமலை.**

- **சட்ட உதவி நிலையம்,
இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு,
01வது மாடி, நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
திருக்கோணமலை.**

- **சட்ட உதவி நிலையம்,
இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு,
நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
மூதூர்.**

- **சட்ட உதவி நிலையம்,
இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு,
நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
கந்தளாய்.**

- **நோர்வே அகதிகள் பேரவை,
இல: 108, தபாற் கந்தோர் வீதி,
திருக்கோணமலை.**

**47. பராமரிப்பு சட்டத்தின் கீழ் பராமரிப்பு கோரி முஸ்லீம் குடும்ப அங்கத்தவர்கள் விண்ணப்பம் செய்ய முடியுமா?**

முஸ்லீம் குடும்ப அங்கத்தவர்கள் 1999ம் ஆண்டின் 37ம் இலக்க பராமரிப்பு சட்டத்தின் கீழ் பராமரிப்பு கோரி விண்ணப்பம் செய்ய முடியாது.

**48.முஸ்லீம்களின் பராமரிப்பு தொடர்பான விண்ணப்பத்தை எச்சட்டத்தின் கீழ் செய்ய முடியும்?**

1951ம் ஆண்டின் 13ம் இலக்க முஸ்லீம் விவாகம் மற்றும் விவாகரத்து கட்டளை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பத்தை செய்ய முடியும்.

**49. முஸ்லீம்களுடைய பராமரிப்பு விண்ணப்பம் எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்?**

காதி நீதிமன்றில் ( QUAZY COURT ).

**50. 1951ம் ஆண்டின் 13ம் இலக்க முஸ்லீம் விவாகம் மற்றும் விவாகரத்து கட்டளை சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில், யார் காதி நீதிமன்றில் பராமரிப்பு கோரிக்கை விண்ணப் பத்தை தாக்கல் செய்யமுடியும்?**

எவராவது ஒரு முஸ்லீம் கணவன் அல்லது தந்தை தனது மனைவி அல்லது பிள்ளையை பராமரிக்காது தவிர்த்து நடப்பாராயின் அவருக்கு எதிராக, குறித்த மனைவி தனக்கும் தனது பிள்ளைக்கும் பராமரிப்புக்கோரி காதி நீதிமன்றில் (QUAZY COURT) பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்யமுடியும்.

**51. முஸ்லீம் பெற்றோருக்கிடையில் திருமணம் ஒன்று இடம் பெற்றிராத நிலையில் பிறந்துள்ள பிள்ளை யொன்றுக்கு காதி நீதிமன்றில் பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்யமுடியுமா?**

1951ம் ஆண்டின் 13ம் இலக்க முஸ்லீம் விவாகம் மற்றும் விவாகரத்து கட்டளை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆரம்ப காலத்தில் அத்தகைய பிள்ளையொன்று தொடர்பில் காதி நீதிமன்றில் பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய முடியாத நிலைமை காணப்பட்டது. ஆனால் 1965ம் ஆண்டில் குறித்த சட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் தற்போதைய நிலையில் அத்தகைய பிள்ளையொன்று தொடர்பில் காதி நீதிமன்றில் பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்யமுடியும் தீர்ப்புச்சட்டம் - [1998 (1) S.L.R 47].

**52. திருமணம் ஒன்று இடம் பெற்றிராத நிலையில் பிறந்துள்ள முஸ்லீம் பிள்ளையொன்றுக்கு காதி நீதிமன்றில் பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்யப்படுமிடத்து கவனிக் கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் யாவை?**

சட்டரீதியான திருமணபந்தம் இல்லாத சந்தர்ப்பத்தில் பிறக்கும் குழந்தை தொடர்பில் எதிர்மனுதாரரே, பிள்ளையின் தந்தை என உறுதியான சான்றுகள் மூலம் எண்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறாக

எண்பிக்கப்பட்டுள்ளதென நீதிமன்றம் திருப்திப்படும் சந்தர்ப்பத்திலும் மற்றும் எதிர்மனுதாரர், தானே தான் குறித்த பிள்ளையின் தந்தையென ஏற்றுக்கொள்ளுகின்ற சந்தர்ப்பத்திலும் திருமணம் இடம் பெற்றிராத சந்தர்ப்பத்தில் பிறக்கும் குழந்தை தொடர்பிலும் நீதிமன்றம் பராமரிப்பு கட்டளையைப் பிறப்பிக்கும்.

இத்தகைய பிள்ளைக்கான பராமரிப்பு கோரிக்கை தொடர்பான வழக்குகளில், குறித்த பிள்ளையின் தந்தை தான் இல்லை என்று கூறி தந்தைமையை (PATERNITY) எதிர்மனுதாரர் மறுப்பாராயின், அத்த கைய சந்தர்ப்பத்தில் பிள்ளையின் தந்தைமையை (PATERNITY OF THE CHILD) எண்பிக்கும் பொறுப்பு மனுதாரரைச் சார்ந்ததாகும்.

**53. காதி நீதிமன்றில் பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்யப்பட வேண்டுமாயின், எந்தப் பிரதேசத்தில் அந்த விண்ணப்பத்தை தாக்கல் செய்ய வேண்டும்?**

விண்ணப்பதாரரான மனைவி தான் வசிக்கும் பிரதேசத்தில் அமைந்துள்ள காதி நீதிமன்றில் குறித்த பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பத்தை தாக்கல் செய்யமுடியும்.

**54. காதி நீதிமன்றில் பராமரிப்பு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்யும்போது, குறித்த விண்ணப்பத்தில் எத்தகைய விடயங்களை உள்ளடக்க வேண்டும்?**

குறித்த பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பத்தில் மனுதாரரின் பெயர் முகவரி, எதிர்மனுதாரரின் பெயர் முகவரி மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவருக்கிடையில் இடம்பெற்ற திருமணத்தின் விபரம், பிள்ளை பிறந்த காலப்பகுதி, எதிமனுதாரரின் பொருளாதார நிலைமை, எதிர்மனுதாரருக்கு கிடைக்கப்பெறும் மாதாந்த வருமானம் அல்லது உழைப்பின் அளவு, எக்காலப்பகுயில் இருந்து எதிர்மனுதாரரை பராமரிக்க தவறியுள்ளார் என்பது பற்றிய விபரம் மற்றும் மனுதாரர் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் கோருகின்ற நிவாரணங்கள் என்பன பற்றி மனுவில் அல்லது விண்ணப்பத்தில் விபரமாகக் குறிப்படப்படுதல் வேண்டும்.

**55. முஸ்லீம் பிள்ளையொன்று எவரிடமிருந்து பராமரிப்பை கோரலாம்?**

முஸ்லிம் பிள்ளையொன்று பராமரிப்பை தாயிடமிருந்து அல்லாமல், தந்தையிடமிருந்து அல்லது தந்தையின் இறுதிவிருப்பாவணச் சொத்தை வைத்திருப்பவரிடமிருந்து மட்டுமே கோரலாம்

**56. முஸ்லீம் பிள்ளைகளுடைய பராமரிப்பு கோரிக்கை தொடர்பில் வயது எல்லைகள் எவையும் வரையறை செய்யப்பட்டுள்ளதா?**

1951ம் ஆண்டின் 13ம் இலக்க முஸ்லீம் விவாகம் மற்றும் விவாகரத்து கட்டளை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முஸ்லீம் தந்தை ஒருவர்

தன்னுடைய மகனுக்கு அவன் 18 வயதை பூர்த்தியாகும் வரையிலும், மற்றும்

மகளுக்கு, அவள் திருமணம் முடிக்கும் வரையிலும் பராமரிப்பைச்செய்ய வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளார்.

**57. முஸ்லீம் வயதுவந்த பிள்ளை எவ்வாறு பராமரிப்பை கோரலாம்?**

தங்களைத் தாமே பராமரித்துக்கொள்ள இயலாதவர்களாகிய வயது வந்த பிள்ளைகளினதும், ஊனமுற்ற பிள்ளைகளினதும் பராமரிப்பு கோரிக்கைகள் தொடர்பான ஏற்பாடுகள் எவையும் 1951ம் ஆண்டின் 13ம் இலக்க முஸ்லீம் விவாகம் மற்றும் விவாகரத்து கட்டளை சட்டத்தில் இல்லாதபடியால், அத்தகையவர்களால் பராமரிப்புக் கோரிக்கை விண்ணப்பங்கள் காதி நீதிமன்றத்தில் முன்வைக்கப்படுமாயின் அத்தகைய சந்தர்ப்பத்தில் 1999ம் ஆண்டின் 37ம் இலக்க பரமரிப்புச் சட்டத்தில் **(MAINTENANCE ACT NO: 37 OF 1999)** காணப்படும் இவ்விடயம் தொடர்பான ஏற்பாடுகளைப் கவனத்திற் கொள்ள வேண்டிய தேவை காதி நீதிமன்றிற்கு ஏற்படலாம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**58. காதி நீதிமன்றின் கட்டளை தொடர்பில் நீதவான் நீதிமன்றம் ஊடாக எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்?**

எதிர்மனுதாரரான கணவனால் மனைவிக்கோ அல்லது பிள்ளைக்கோ பராமரிப்புத்தொகை

செலுத்த வேண்டுமென காதி நீதிமன்றம் கட்டளையிட்டும் குறித்த எதிர்மனுதாரர் குறித்த பராமரிப்புத் தொகையை 03 மாதங்களுக்குள் செலுத்தத் தவறின், மனுதாரர் ஒரு நிறைவேற்று ஆணையைக் (ENFORCEMENT ORDER) கோரி காதி நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்யலாம்.

காதி அவர்கள் அத்தகைய மனு கிடைக்கப் பெற்றதும் உரிய நடைமுறையை பின்பற்றி விசாரணை ஒன்றை மேற்கொண்டு பராமரிப்புத் தொகை நிலுவையாக உள்ளது என்பதையிட்டு திருப்தியடைவாராயின், அவர் குறித்த பராமரிப்புத் தொகையை செலுத்த வேண்டியவரின் பெயர் குறிப்பிடப்பட்டு எதிர்மனுதாரர் வசிக்கும் பிரதேச நீதிவான் நீதிமன்றுக்கு நிறைவேற்று ஆணை (ENFORCEMENT ORDER) ஒன்றை அனுப்பி வைப்பார்.

குறித்த நிறைவேற்று ஆணையில் குறிப்பிட்ட முழுத் தொகையும் நீதவான் நீதிமன்றினால் தண்டப் பணமாக அறவிடப்பட்டு, அத்தொகை மனுதாரருக்கு வழங்கப்படும்.

**59. காதி நீதிமன்றினால் நிர்ணயிக்கப்பட்ட பராமரிப்பு தொகையை திருத்தம் செய்வதற்கான அதிகாரம் நீதிவான் நீதிமன்றிற்கு உள்ளதா?**

அவ்வாறாகத் திருத்தம் செய்வதற்கு நீதிவான் நீதிமன்றிற்கு அதிகாரம் இல்லை.

**60. காதி நீதிமன்றினால் வழங்கப்பட்ட கட்டளையை யிட்டு திருப்தி அடையாதவர்கள் எங்கு மேன்முறையீடு செய்ய வேண்டும்?**

காதி சபை (QUAZY BOARD) க்கு மேன்முறையீடு செய்தல் வேண்டும்.

**61. காதி நீதிமன்றினால் வழங்கப்பட்ட கட்டளையை யிட்டு திருப்தி அடையாதவர்கள் எத்தனை நாட்களுக்குள் அந்தக் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு (APPEAL) செய்தல் வேண்டும்?**

காதி நீதிமன்றினால் கட்டளை வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு மாத காலத்துக்குள் அந்தக் கட்ளைக்கு எதிராக காதி சபைக்கு **(QUAZY BOARD)** மேன்முறையீடு **(APPEAL)** செய்தல் வேண்டும்.

காதி நீதிமன்றினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக மீளாய்வு விண்ணப்பம் (REVISION APPLICATION) ஒன்றைச் செய்வதாயின், அக்கட்டளை வழங்கப்பட்ட தினத்தில் இருந்து நியாயமான காலப்பகுதிக்குள் காதி சபைக்கு அத்தகைய மீளாய்வு விண்ணப்பத்தைச்செய்தல் வேண்டும்.

<u>மனு/ விண்ணப்பம் (மாதிரி - 1)</u> :

## <u>திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில்</u>

1999ம் ஆண்டு 37ம் இலக்க பராமரிப்பு சட்டத்தின் பிரிவு-02ன் கீழான பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பம்.

இன்பதாஸ் அன்புவதனி,
இல: 40/3, கடல்முக ஒழுங்கை,
திருக்கோணமலை.

வழக்கு இல :

- மனுதாரர்-

எதிர்

செழியன் இன்பதாஸ்,
இல: 12, பாரதி நகர்,
திருக்கோணமலை.

- எதிர் மனுதாரர் -

2011ம் ஆண்டு ............ மாதம் ... ம் நாள்,

தனது சட்டத்தரணி டிலா யூடி மூலம் தோற்றும் மனுதாரின் விண்ணப்பம் பின்வருமாறு கூறுகின்றது:

1) மனுதாரர் வசித்து வருவதும் மற்றும் இதன் பின்னர் விபரிக்கப்படுகின்ற வழக்கெழு காரணம் எழுந்துள்ளதும் இந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள்ளாகும்.

2) 2005ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையில் திருமணம் நடைபெற்றது.

3) அன்றிலிருந்து இவர்கள் இருவரும் திருமண வாழ்க்கையை தொடர்ந்து நடாத்தி கணவன் மனைவியாக வாழ்ந்து வந்துள்ளனர்.

4) குறித்த திருமணத்தை உறுதிப்படுத்தும், திருமணப் பதிவுச் சான்றிதழ் இல: 1235ன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி 'ம-1' என அடையாளமிடப்பட்டு இவ் விண்ணப்பத்துடன் நீதிமன்றில் அணைக்கப்படுவதுடன் அதனை இதன் ஒரு பாகமாகவும் மற்றும் பகுதியாகவும் கருதப்படல் வேண்டும் எனவும் மனுதாரர் கூறுகின்றார்.

5) மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையிலான திருமண வாழ்க்கையின் மூலம் இவர்களுக்கு இரு பிள்ளைகள் பிறந்துள்ளன. குறித்த பிள்ளைகளின் விபரம் வருமாறு,

(அ) இ.யசோதா வயது 06 (ஆ) இ.செந்தூரன் வயது 03.

6) எதிர்மனுதாரரே மேற்குறித்த பிள்ளைகளின் தந்தையாவார். பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள்:

(அ) இ.யசோதா - பிறப்பு அத்தாட்சிப்பத்திர இல:822, மற்றும்
(ஆ) இ.செந்தூரன் -பிறப்பு அத்தாட்சிபபத்திர இல:491, என்பன,

முறையே 'ம-2' மற்றும், 'ம-3' என அடையாளமிடப்பட்டு இவ் விண்ணப்பத்துடன் நீதிமன்றில் அணைக்கப்படுவதுடன் அவற்றை இதன் ஒரு பாகமாகவும் மற்றும் பகுதியாகவும் கருதப்படல் வேண்டும் எனவும் மனுதாரர் கூறுகின்றார்.

7) எதிர்மனுதாரர் கடந்த ஆறு மாதங்களாக மனுதாரரையும் அவரது பிள்ளைகளையும் எந்தவிதத்திலும் பராமரிக்காமல் இருந்து வருகின்றார்.

8) தற்போது மனுதாரர் எந்த விதமான வசதியும் மற்றும் வருமானமும் இன்றி தன்னையும் தனது பிள்ளைகளையும் பராமரிக்க இயலாத நிலையில் நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியாது மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்துவருகின்றார்.

9) எதிர்மனுதாரர் வாகன சாரதியாக கடமையாற்றி வருவதுடன், அவர் மாதமொன்றுக்கு ரூபா இருபத்தி ஐயாயிரத்துக்கு (ரூபா 25,000/=) மேல், மாதாந்தம் வருமானம் பெறுகின்றார்.

10) மேற்குறித்த நிகழ்வுகளின் பிரகாரம், எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கைத் தாக்கல் செய்து பின்வரும் நிவாரணங்களை

பெறவதற்கு மனுதாரருக்கு வழக்கெழு காரணம் எழுந்துள்ள தென மனுதாரர் கூறுகின்றார்.

எனவே, மேன்மை தங்கிய நீதிமன்றினை மனுதாரர் தாழ்மையுடன் வேண்டிக் கொள்வதாவது:

அ) மனுதாரருக்குரிய பராமரிப்புச் செலவாக மாதாந்தம் ரூபா ஆறாயிரம் (ரூபா: 6,000/=) மனுதாரருக்கு செலுத்துமாறு எதிர் மனுதாரருக்கு எதிராக கட்டளை ஒன்றினை பிறப்பிக்கும்படியும்,

ஆ) குறித்த பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தலா ரூபா மூவாயிரம் (ரூபா: 3,000/=) வீதம், இரண்டு பிள்ளைகளுக்கு மாக மாதாந்தம் ரூபா ஆறாயிரம் (ரூபா: 6,000/=) மொத்த மாக செலுத்துமாறு எதிர்மனுதாரருக்கு எதிராக மேலும் கட்டளை ஒன்றினை பிறப்பிக்கும்படியும்,

இ) மாதாந்தம் மேற்குறித்த மொத்தத் தொகையான ரூபா பன்னிரெண்டாயிரத்தையும் (ரூபா: 12,000/=) மனுதாரருக்கு செலுத்துமாறு எதிர்மனுதாரருக்கு எதிராக மேலும் கட்டளை ஒன்றினை பிறப்பிக்கும்படியும், மற்றும்

ஈ) மன்று நீதியானதும் மற்றும் நியாயமானதும் எனக் கருதும் ஏனைய பிற நிவாரணங்களையும் வழங்கும் படியும்.

.......................................

மனுதாரரின் சட்டத்தரணி

மனுவுடன் அணைக்கப்படும் ஆவணங்கள்:

1. சத்தியக் கடதாசி,
2. திருமணப் பதிவுச் சான்றிதழ் இல: 1235 - 'ம-1',
3. பிறப்புச் சான்றிதழ் இல. 822 - 'ம-2',
4. பிறப்புச் சான்றிதழ் இல. 491 - 'ம-3',

.......................................

மனுதாரரின் சட்டத்தரணி

சத்தியக் கடதாசி (மாதிரி - 2):

2011ம் ஆண்டு ........... மாதம் .... ம் நாள்,

திருக்கோணமலை, கடல்முக ஒழுங்கை, இல: 40/3ல் வசித்து வருபவரும் இந்து சமயத்துவருமாகிய இன்பதாஸ் அன்புவதனி ஆகிய நான் உண்மையாகவும் நேர்மையாகவும் மற்றும் விசுவாசமாகவும் உறுதி செய்து பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்:

1). நான் வசிப்பதும் இதன் பின்னர் விபரிக்கப்படுகின்ற வழக்கெழு காரணம் எழுந்துள்ளதும் இந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள்ளாகும்.

2) 2005ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையில் திருமணம் நடைபெற்றது.

3) அன்றிலிருந்து நாங்கள் இருவரும் திருமண வாழ்க்கையை தொடர்ந்து நடாத்தி கணவன் மனைவியாக வாழ்ந்து வந்துள்ளோம்.

4) குறித்த திருமணத்தை உறுதிப்படுத்தும், திருமணப் பதிவுச் சான்றிதழ் இல: 1235ன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி 'ம-1' என அடையாளமிடப்பட்டு நீதிமன்றில் அணைக்கப்படுவதுடன் அதனை இவ் விண்ணப்பதின் ஒரு பாகமாகவும் மற்றும் பகுதியாகவும் கருதப்படல் வேண்டும் எனவும் நான் கூறுகின்றேன்.

5) எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையிலான திருமண வாழ்க்கையின் மூலம் எங்களுக்கு இரு பிள்ளைகள் பிறந்துள்ளன. குறித்த பிள்ளைகளின் விபரம் வருமாறு:

(அ) இ.யசோதா வயது 06 (ஆ) இ.செந்தூரன் வயது 03.

6) எதிர்மனுதாரரே, மேற்குறித்த பிள்ளைகளின் தந்தையாவார். பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள்:

(அ) இ.யசோதா - பிறப்பு அத்தாட்சிப்பத்திர இல: 822, மற்றும்
(ஆ) இ.செந்தூரன் - பிறப்புஅத்தாட்சி பத்திரம் இல:491,என்பன

முறையே 'ம-2' மற்றும், 'ம-3' என அடையாளமிடப்பட்டு நீதிமன்றில் அணைக்கப்படுவதுடன் அவற்றை இவ்விண்ணப்பத்தின் ஒரு பாகமாகவும் மற்றும் பகுதியாகவும் கருதப்படல் வேண்டும் எனவும் நான் கூறுகின்றேன்.

7) எதிர்மனுதாரர் கடந்த ஆறு மாதங்களாக என்னையும் பிள்ளைகளையும் எந்தவிதத்திலும் பராமரிக்காமல் இருந்து வருகின்றார்.

8) தற்போது நான் எந்த விதமான வசதியும் மற்றும் வருமானமும் இன்றி என்னையும் எனது பிள்ளைகளையும் பராமரிக்க இயலாதநிலையில் நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடாத்தமுடியாது மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றேன்

9). எதிர்மனுதாரர் வாகன சாரதியாக கடமையாற்றி வருவதுடன், அவர் மாதமொன்றுக்கு ரூபா இருபத்தி ஐயாயிரத்துக்கு (ரூபா 25,000/=) மேல், மாதாந்தம் வருமானம் பெறுகின்றார்.

10). , மேற்குறித்த நிகழ்வுகளின் பிரகாரம், எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கைத் தாக்கல் செய்வதற்கு வழக்கெழு காரணம் எழுந்துள்ளதென நான் கூறுகின்றேன்.

11). மேலே சொல்லப்பட்டவை நான் அறிந்தவரையிலும் எனது அறிவுக்கு எட்டியவரையிலும் உண்மையானவை என இத்தால் உறுதி செய்கின்றேன்.

மேற் சொன்ன சத்தியக் கூற்றை வெளிப்படுத்துபவர் வாசித்து விளங்கி அதிலுள்ள விடயங்கள் அனைத்தும் உண்மையானதென என் முன்னிலையில் உறுதிசெய்து திருக்கோணமலையில் வைத்து 2011ம் ஆண்டு ............ மாதம் ..... நாள் அவரால் இதில் கையொப்பம் இடப்பட்டது.

..................................

வெளிப்படுத்துபவர்

என் முன்னிலையில்

சமாதான நீதிவான்/
சத்திய பிரமாண ஆணையாளா

மனு/ விண்ணப்பம் (மாதிரி - 3) :

## திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில்

1999ம் ஆண்டு 37ம் இலக்க பராமரிப்பு சட்டத்தின் பிரிவு-02ன் கீழான பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பம்.

வேலுப்பிள்ள யோகம்மா,
இல: 310, 15வது ஒழுங்கை,
நீதிமன்ற வீதி,
திருக்கோணமலை.

வழக்கு இல :

- மனுதாரர் -

எதிர்

மோகன் கார்த்திக்,
இல: 12, மட்டக்களப்பு வீதி,
58வது மைல் கல்
மூதூர்.

- எதிர் மனுதாரர் -

2011ம் ஆண்டு ........... மாதம் ..... ம் நாள்,

தனது சட்டத்தரணி ஆர்.கோபிநாத் மூலம் தோற்றும் மனுதாரின் விண்ணப்பம் பின்வருமாறு கூறுகின்றது:

1. மனுதாரர் வசித்து வருவதும் மற்றும் இதன் பின்னர் விபரிக்கப்படுகின்ற வழக்கெழு காரணம் எழுந்துள்ளதும் இந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள்ளாகும்.

2. 2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் நாள் மனுதாரரின் மகள் கமலரூபிக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையில் திருமணம் நடைபெற்றது.

3. அன்றிலிருந்து இவர்கள் இருவரும் திருமண வாழ்க்கையை தொடர்ந்து நடாத்தி கணவன் மனைவியாக வாழ்ந்து வந்துள்ளனர்.

4. குறித்த திருமணத்தை உறுதிப்படுத்தும், திருமணப் பதிவுச் சான்றிதழ் இல: 125ன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி 'ம-1' என அடையாளமிடப்பட்டு நீதிமன்றத்தில் அணைக்கப்படுவதுடன் அதனை இவ் விண்ணப்பத்தின் ஒரு பாகமாகவும் மற்றும் பகுதியாகவும் கருதப்படல் வேண்டும் எனவும் மனுதார் கூறுகின்றார்.

5. மனுதாரரின் மகள் கமலரூபிக்கும் மற்றும் எதிர்மனுதாரருக்கும் இடையிலான திருமண வாழ்க்கையின் மூலம் இவர்களுக்கு ஒரு பிள்ளை பிறந்துள்ளது. குறித்த பிள்ளையின் விபரம் வருமாறு:

(அ) கா.ரூபன் - தற்போது வயது 04

6. எதிர்மனுதாரரே மேற்குறித்த பிள்ளையின் தந்தையாவார். பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல:202 'ம-2' என அடையாளமிடப்பட்டு நீதிமன்றத்தில் அணைக்கப்படுவதுடன் அது இவ்விண்ணப்பத்தின் ஒரு பாகமாகவும் மற்றும் பகுதியாகவும் கருதப்படல் வேண்டும் எனவும் மனுதாரர் கூறுகின்றார்.

7. குறித்த பிள்ளை கடந்த மூன்று வருடங்களாக மனுதாரரின் கட்டுக்காவலிலும் பாதுகாவலிலும் இருந்துவருகின்றான்.

8. எதிர்மனுதாரர் கடந்த மூன்று வருடங்களாக பிள்ளையை எந்தவிதத்திலும் பராமரிக்காமல் இருந்து வருகின்றார்.

9. எதிர்மனுதாரர் கட்டிடம் கட்டும் தொழில் செய்துவருகின்றார். அதன் மூலம் அவர் ரூபா முப்பதாயிரத்துக்கு (ரூபா 30,000/=) மேல் மாதாந்த வருமானத்தை பெற்றுவருகின்றார்.

10. மேற்குறித்த நிகழ்வுகளின் பிரகாரம், எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கைத் தாக்கல் செய்து பின்வரும் நிவாரணங்களை பெறவதற்கு வழக்கெழு காரணம் எழுந்துள்ளதென மனுதார் கூறுகின்றார்.

எனவே, மேன்மை தங்கிய நீதிமன்றினை தாழ்மையுடன் வேண்டிக் கொள்வதாவது:

அ) குறித்த பிள்ளையின் பராமரிப்புக்காக மாதாந்தம் ரூபா ஐந்தாயிரம் (ரூபா: 5,000/=) வீதம் மனுதாரருக்கு செலுத்துமாறு எதிர்மனுதாரருக்கு எதிராக கட்டளை ஒன்றினை பிறப்பிக்கும்படியும், மற்றும்

ஆ) மன்று நீதியானதும் மற்றும் நியாயமானதும் எனக் கருதும் ஏனைய பிற நிவாரணங்களையும் வழங்கும் படியும்.

..............................
மனுதாரரின் சட்டத்தரணி

மனுவுடன் அணைக்கப்படும் ஆவணங்கள்:

1. சத்தியக்கடதாசி,

2. திருமணப் பதிவுச் சான்றிதழ் இல: 125 - 'ம-1',

3. பிறப்புச் சான்றிதழ் இல. 202 - 'ம-2',

..............................
மனுதாரரின் சட்டத்தரணி

<u>சத்தியக் கடதாசி (மாதிரி - 4):</u>

2011ம் ஆண்டு .............. மாதம் ..... ம் நாள்,

திருக்கோணமலை, நீதிமன்ற வீதி, 15வது ஒழுங்கை, இல: 310ல் வசித்துவருபவரும் இந்து சமயத்துவருமாகிய வேலுப்பிள்ள யோகம்மா ஆகிய நான் உண்மையாகவும் நேர்மையாகவும் மற்றும் விசுவாசமாகவும் உறுதி செய்து பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்:

1) நான் வசித்துவருவதும் மற்றும் இதன் பின்னர் விபரிக்கப்படுகின்ற வழக்கெழு காரணம் எழுந்துள்ளதும் இந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள்ளாகும்.

2) 2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் நாள் திகதி எனது மகள் கமலரூபிக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையில் திருமணம் நடைபெற்றது.

3) அன்றிலிருந்து இவர்கள் இருவரும் திருமண வாழ்க்கையை தொடர்ந்து நடாத்தி கணவன் மனைவியாக வாழ்ந்து வந்துள்ளனர்.

4) குறித்த திருமணத்தை உறுதிப்படுத்தும், திருமணப் பதிவுச் சான்றிதழ் இல: 125ன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி 'ம-1' என அடையாளமிடப்பட்டு இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு நீதிமன்றில் அணைக்கப்படுவதுடன் அதனை இவ்விண்ணப்பத்தின் ஒரு பாகமாகவும் மற்றும் பகுதியாகவும் கருதப்படல் வேண்டும் எனவும் நான் கூறுகினறேன்.

5) எனது மகள் கமலரூபிக்கும் மற்றும் எதிர்மனுதாரருக்கும் இடையிலான திருமண வாழ்க்கையின் மூலம் இவர்களுக்கு ஒரு பிள்ளை பிறந்துள்ளது. குறித்த பிள்ளையின் விபரம் வருமாறு:

(அ) கா.ரூபன் - தற்போது வயது 04

6. எதிர்மனுதாரரே, மேற்குறித்த பிள்ளையின் தந்தையாவார். பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல: 202 'ம-2' என அடையாளமிடப்பட்டு நீதிமன்றில் அணைக்கப்படுவதுடன் அது இவ் விண்ணப்பத்தின் ஒரு பாகமாகவும் மற்றும் பகுதியாகவும் கருதப்படல் வேண்டும் எனவும் நான் கூறுகினறேன்.

7. குறித்த பிள்ளை கடந்த மூன்று வருடங்களாக எனது கட்டுக்காவலிலும் பாதுகாவலிலும் இருந்து வருகின்றான்.

8. எதிர்மனுதாரர் கடந்த மூன்று வருடங்களாக பிள்ளையை எந்தவிதத்திலும் பராமரிக்காமல் இருந்து வருகின்றார்.

9. எதிர்மனுதாரர் கட்டிடம் கட்டும் தொழில் செய்துவருகின்றார். அதன்மூலம் அவர் ரூபா முப்பாயிரத்துக்கு (ரூபா 30,000/=) மேல் மாதாந்த வருமானத்தை பெற்றுவருகின்றார்.

10. மேற்குறித்த நிகழ்வுகளின் பிரகாரம், எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கைத் தாக்கல் செய்வதற்கு வழக்கெழு காரணம் எழுந்துள்ளதென நான் கூறுகின்றேன்.

11. மேலே சொல்லப்பட்டவை யாவும் நான் அறிந்தவரையிலும் எனது அறிவுக்கு எட்டியவரையிலும் உண்மையானவை என இத்தால் உறுதி செய்கின்றேன்.

| | |
|---|---|
| மேற் சொன்ன சத்தியக் கூற்றை வெளிப்படுத்துபவர் வாசித்து விளக்கி அதிலுள்ள விடயங்கள் அனைத்தும் உண்மையானது என என் முன்னிலையில உறுதி செய்து 2011ம் ஆண்டு .................. மாதம் ...... ம் நாள் திருக்கோணமலையில் வைத்து அவரால் இதில் கையொப்பம் இடப்பட்டது. | ................................<br>வெளிப்படுத்துபவர்<br><br>என் முன்னிலையில் |

சமாதான நீதிவான்/
சத்திய பிரமாண ஆணையாளர்

மனு/ விண்ணப்பம (மாதிரி - 5):

## திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில்

1999ம் ஆண்டு 37ம் இலக்க பராமரிப்பு சட்டத்தின் பிரிவு-02ன் கீழான பராமரிப்பு கோரிக்கை விண்ணப்பம்.

கோணாமலை ரமேஷ்,
இல: 10, 9ம் வட்டாரம்,
பிரதான வீதி,
திருக்கோணமலை.

வழக்கு இல :

- மனுதாரர் -

எதிர்

இராசையா கோணாமலை,
இல: 110, மத்திய வீதி,
உவர்மலை,
திருக்கோணமலை.

- எதிர் மனுதாரர் -

2011ம் ஆண்டு .......... மாதம் .....ம் நாள்,

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரின் விண்ணப்பம் பின்வருமாறு கூறுகின்றது:

1. மனுதாரர், எதிர் மனுதாரரின் மகன் ஆவார்.

2. மனுதாரர், தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் முதலாம் வருடத்தில் கல்வி பயின்று வருகின்றார்.

3. மனுதாரருக்கு, அவருடைய கல்வி, உணவு, உடை மற்றும் ஏனைய செலவுகளுக்காக மாதாந்தம் ரூபா பதினைந்தாயிரம் (ரூபா: 15,000/=) செலவு ஏற்பட்டு வருகின்றது.

4. கொழும்பு பல்கலைக்கழகம் மாதாந்தம் ரூபா நான்காயிரத்தை (ரூபா: 4,000/=) மகாபொல புலமைப் பரிசு நிதியாக மனுதாரருக்கு கொடுப்பனவு செய்கின்றது.

5. மனுதாரரின் தந்தையான எதிர்மனுதாரர் திருகோணமலையின் பிரதான வீதியில் வர்த்தக நிறுவனம் ஒன்றினை சொந்தமாக வைத்திருப்பதுடன், அதனை அவரே நடாத்திவருகின்றார்.

6. எதிர்மனுதாரர் குறித்த வர்த்தக நிறுவனத்தை நடாத்தி வருவருவதன் மூலம் மாதாந்தம் ரூபா நூறு ஆயிரம் (ரூபா: 100.000/=) வரையில் வருமானம் பெற்று வருகின்றார்.

7. எதிர்மனுதாரர், மனுதாரரை குறித்த வர்த்தக நிறுவனத்தில் தொழில் செய்யுமாறு கட்டாயப்படுத்திய போதிலும் எதிர்மனுதாரரின் விருப்பத்துக்கு மாறாகவே மனுதாரர், பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கல்வி பயின்று வருகின்றார்.

8. மனுதாரர், எதிர்மனுதாரரின் விருப்பத்துக்கு மாறாக பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வருகின்றமையின் காரணமாக எதிர்மனுதாரர் மனுதாரரை 2011ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து பராமரிக்க தவறியுள்ளளார்.

9. மனுதாரரின் தற்போதைய வயது இருபது. மனுதாரரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல: 802 ஆனது "ம-1" என அடையாளமிடப்பட்டு நீதிமன்றில் அணைக்கப்படுவதுடன் அது இவ்விண்ணப்பத்தின் ஒரு பாகமாகவும் மற்றும் பகுதியாகவும் கருதப்படல் வேண்டும் எனவும் மனுதாரர் கூறுகின்றார்.

10. மனுதாரரின் தாயார் வீட்டு பெண்ணாக (HOUSE WIFE) எதிர்மனுதாரருடனேயே வசித்துவருகின்றார்.

11. தற்போது மனுதாரர் மேற்குறிப்பிட்ட புலமைப்பரிசில் கொடுப்பனவை தவிர, வேறு எந்த விதமான வசதியும்

மற்றும் வருமானமும் இன்றி தன்னைத் தானே பராமரிக்க இயலாத நிலையில் நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடாத்தமுடியாது மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றார்.

12. மேற்குறித்த நிகழ்வுகளின் பிரகாரம், எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கைத் தாக்கல் செய்து பின்வரும் நிவாரணங்களை பெறுவதற்கு தனக்கு வழக்கெழு காரணம் எழுந்துள்ளதென மனுதாரர் கூறுகின்றார்.

எனவே, மேன்மை தங்கிய நீதிமன்றினை மனுதாரர் தாழ்மையுடன் வேண்டிக் கொள்வதாவது:

அ) மனுதாரருக்குரிய பராமரிப்புச் செலவாக மாதாந்தம் ரூபா பதினைந்தாயிரம் (ரூபா: 15,000/=) மனுதாரருக்கு மாதாந்தம் செலுத்துமாறு எதிர்மனுதாரருக்கு எதிராக கட்டளை பிறப்பிக்கும்படியும,

ஆ) குறித்த ரூபா பதினைந்தாயிரம் (ரூபா: 15,000/=) வையும் மாதாந்தம் மனுதாரரின் மேற்குறித்த முகவரிக்கு காசுக்கட்டளையாக (MONEY ORDER) அனுப்பிவைக்கும்படி எதிர்மனுதாரருக்கு எதிராக மேலும் கட்டளை ஒன்றினை பிறப்பிக்கும்படியும்,

இ) மன்று நீதியானதும் மற்றும் நியாயமானதும் எனக் கருதும் ஏனைய பிறநிவாரணங்களையும் வழங்கும்படியும்.

............................
மனுதாரர்

மனுவுடன் அணைக்கப்படும் ஆவணங்கள்:

1. சத்தியக்கடதாசி,
2. பிறப்புச் சான்றிதழ் இல. 802 - 'ம-1'.

............................
மனுதாரர்

<u>சத்தியக் கடதாசி (மாதிரி - 6):</u>

2011ம் ஆண்டு ............... மாதம் .... ம் நாள்,

திருக்கோணமலை, உவர்மலை, மத்திய வீதி இல: 80ல் வசித்துவரும் இந்து சமயத்துவருமாகிய கோணாமலை ரமேஷ், ஆகிய நான் உண்மையாகவும் நேர்மையாகவும் மற்றும் விசுவாசமாகவும் உறுதி செய்து பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்:

1. நான் தான் இவ்வழக்கின் மனுதாரரும் மற்றும் இதன் வெளிப்படுத்துநருமாவேன்.

2. நான் இவ்வழக்கின் எதிர்மனுதாரரின் மகன் ஆவேன்.

3. நான் தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் முதலாம் வருடத்தில் கல்வி பயின்று வருகின்றேன்.

4. எனது கல்வி, உணவு, உடை மற்றும் ஏனைய அவசியத் தேவைக்கான செலவுகளுக்காக மாதாந்தம் ரூபா பதினைந்தாயிரம் (ரூபா: 15,000/=) எனக்கு செலவு ஏற்பட்டு வருகின்றது.

5. கொழும்பு பல்கலைக்கழகம் மாதாந்தம் ரூபா நான்காயிரத்தை (ரூபா: 4,000/=) மகாபொல புலமை பரிசு நிதியாக எனக்கு கொடுப்பனவு செய்கின்றது.

6. எனது தந்தையான எதிர்மனுதாரர் திருகோணமலையின் பிரதான வீதியில் வர்த்தக நிறுவனம் ஒன்றினை சொந்தமாக வைத்திருப்பதுடன், அதனை அவரே நடாத்திவருகின்றார்.

7. எதிர்மனுதாரர் குறித்த வர்த்தக நிறுவனத்தை நடாத்தி வருவருவதன் மூலம் மாதாந்தம் ரூபா நூறு ஆயிரம் (ரூபா: 100.000/=) வரையில் வருமானம் பெற்று வருகின்றார்.

8. எதிர்மனுதாரர், என்னை குறித்த வர்த்தக நிறுவனத்தில் தொழில் செய்யுமாறு கட்டாயப்படுத்திய போதிலும் எதிர்மனுதாரரின் விருப்பத்துக்கு மாறாகவே, நான்

பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கல்வி பயின்று வருகின்றேன்.

9. நான் எதிர்மனுதாரரின் விருப்பத்துக்கு மாறாக பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வருகின்றமையின் காரணமாக எதிர்மனுதாரர் என்னை 2011ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து பராமரிக்க தவறியுள்ளளார்.

10. என்னுடைய தற்போதைய வயது இருபது. எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல: 802 ஆனது "ம-1" என அடையாளமிடப்பட்டு நீதிமன்றில் அணைக்கப்படுவதுடன் அதனை இவ்விண்ணப்பத்தின் ஒரு பாகமாகவும் மற்றும் பகுதியாகவும் கருதப்படல் வேண்டும் எனவும் நான் கூறுகினறேன்.

11. எனது தாயார் வீட்டு பெண்ணாக (HOUSE WIFE) எதிர்மனுதாரருடனேயே வசித்துவருகின்றார்.

12. தற்போது நான் மேற்குறிப்பிட்ட கொடுப்பனவை தவிர, வேறு எந்த விதமான வசதியும் மற்றும் வருமானமும் இன்றி என்னை பராமரிக்கமுடியாத நிலையில் நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடாத்தமுடியாது மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றேன்.

13. மேலே சொல்லப்பட்டவை யாவும் நான் அறிந்தவரையிலும் எனது அறிவுக்கு எட்டியவரையிலும் உண்மையானவை என இத்தால் உறுதி செய்கின்றேன்.

| | |
|---|---|
| மேற் சொன்ன சத்தியக் கூற்றை வெளிப்படுத்துபவர் வாசித்து விளக்கி அதிலுள்ள விடயங்கள் அனைத்தும் உண்மையானது என என் முன்னிலையில உறுதி செய்து 2011ம் ஆண்டு ..................... மாதம் ............ம் நாள் திருக்கோணமலையில் வைத்து அவரால் இதில் கையொப்பம் இடப்பட்டது. | ..............................<br>வெளிப்படுத்துபவர்<br><br>என் முன்னிலையில்<br><br>..........................................<br>சமாதான நீதிவான்/<br>சத்திய பிரமாண ஆணையாளர் |

மனு/ விண்ணப்பம் (மாதிரி - 7):

## திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில்

1999ம் ஆண்டு 37ம் இலக்க பராமரிப்பு சட்டத்தின் பிரிவு-02ன் கீழ் பராமரிப்புத் தொகையை அதிகரிகரும்படி கோருவதான விண்ணப்பம்.

வேனுகோபால் கீதா,
இல: 10, 9ம் வட்டாரம்,
நிலாவெளி,
திருக்கோணமலை.

வழக்கு இல :

- மனுதாரர்-

எதிர்

மாதவன் வேனுகோபால்,
இல: 12, சந்தை வீதி,
நிலாவெளி,
திருக்கோணமலை.

- எதிர் மனுதாரர் -

2011ம் ஆண்டு ............. மாதம் .....ம் நாள்,

தனது சட்டத்தரணி ஜெ.நிலோஜன் மூலம் தோற்றும் மனுதாரின் விண்ணப்பம் பின்வருமாறு கூறுகின்றது:

1. மனுதாரர் தனக்கும் தனது இரண்டு பிள்ளைகளுக்கும் பராமரிப்புக்கோரி எதிர்மனுதாரருக்கு எதிராக ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றை செய்துள்ளார்.

2. குறித்த விண்ணப்பம் தொடர்பான விசாரணையின் இறுதியில் நீதிமன்றம் எதிர்மனுதாரரை, மனுதாரருக்கும் அவரது இரண்டு பிள்ளைகளுக்கும் பராமரிப்பு தொகையை செலுத்தும்படி 2008ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் நாள் கட்டளை பிறப்பித்தது.

3. 2008ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் நாள் நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்பட்ட கட்டளையின் பிரகாரம் குறித்த காலப்பகுதியில் இருந்து மனுதாரருக்கு மாதாந்தம் ரூபா நான்காயிரமும் (ரூபா: 4,000/=) செலுத்தும்படி நீதிமன்றம் எதிர்மனுதாரருக்கு உத்தரவு இட்டது.

4. குறித்த கட்டளையின் பிரகாரம், மனுதாரரின் இரண்டு பிள்ளைகளுக்கும் தலா ரூபா இரண்டாயிரத்து ஐநூறு (ரூபா: 2,500/=) வீதம், மாதாந்தம் ரூபா ஐந்தாயிரம் (ரூபா: 5,000/=) மொத்த பராமரிப்பு தொகையாக செலுத்தும்படி நீதிமன்றம் எதிர்மனுதாரருக்கு மேலும் உத்தரவு இட்டது.

5. குறித்த கட்டளையின் பிரகாரம் எதிர்மனுதாரர் தொடர்ச்சியாகவும் ஒழுங்காகவும் மொத்த பராமரிப்புத் தொகையாக மாதாந்தம் ரூபா ஒண்பதாயிரம் (ரூபா: 9,000/=) மனுதாரருக்கு செலுத்திவருகின்றார்.

6. ஆனால் வாழ்க்கைச் செலவு மற்றும் பிள்ளைகளின் கல்விச் செலவு என்பவற்றின் அதிகரிப்பு காரணமாக தற்போது செலுத்தப்பட்டுவரும் பராமரிப்பு தொகை நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடாத்த போதுமானவையாக இல்லை என மனுதாரர் கூறுகின்றார்.

7. எதிர்மனுதாரர் தற்போது கடல் தொழில் செய்து வருவதன் மூலம் ரூபா முப்பாயிரத்துக்கு (ரூபா 30,000/=) மேல் மாதாந்தம் வருமானத்தை பெற்றுவருகின்றார்.

8. எனவே மேலே சொல்லப்பட்ட நிகழ்வுகளின் பிரகாரம் குறித்த மாதாந்த பராமரிப்பு தொகையை அதிகரித்துச் செலுத்தும்படி எதிர்மனுதாரரை கோருவதற்கு மனுதாரருக்கு நியாயமான காரணங்கள் உண்டு என்றும் மனுதாரர் கூறுகின்றார்.

எனவே, மேன்மை தங்கிய நீதி மன்றினை மனுதாரர் தாழ்மையுடன் வேண்டிக் கொள்வதாவது:

அ) மனுதாரருக்குரிய பராமரிப்புச் செலவாக மாதாந்தம் ரூபா ஆறாயிரம் (ரூபா: 6,000/=) செலுத்துமாறு எதிர் மனுதாரருக்கு எதிராக கட்டளை பிறப்பிக்கும்படியும,

ஆ) குறித்த பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் தலா ரூபா மூவாயிரத்து ஐநூறும் (ரூபா: 3,500/=) வீதம் இரண்டு பிள்ளைகளுக்குமாக மாதாந்தம் ரூபா ஏழாயிரம் (ரூபா: 7,000/=) செலுத்துமாறு எதிர்மனுதாரருக்கு எதிராக மேலும் கட்டளை ஒன்றினை பிறப்பிக்கும்படியும்,

இ) மாதாந்தம் மேற்குறித்த மொத்த தொயைான ரூபா பதின் மூன்றாயித்தையும் (ரூபா: 13,000/=) மனுதாரருக்கு செலுத்துமாறு எதிர்மனுதாரருக்கு எதிராக மேலும் கட்டளை ஒன்றினை பிறப்பிக்கும்படியும், மற்றும்

ஈ) மன்று நீதியானதும் மற்றும் நியாயமானதும் எனக் கருதும் ஏனைய பிற நிவாரணங்களையும் வழங்கும் படியும்.

..............................

மனுதாரரின் சட்டத்தரணி

<u>சத்தியக்கடதாசி (மாதிரி - 8):</u>

2011ம் ஆண்டு .......... மாதம் .... ம் நாள்,

திருக்கோணமலை, நிலாவெளி, 9ம் வட்டாரம், இல: 10ல் வசித்துவருபவரும் இந்து சமயத்துவருமாகிய வேனுகோபால் கீதா ஆகிய நான் உண்மையாகவும் நேர்மையாகவும் மற்றும் விசுவாசமாகவும் உறுதிசெய்து பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்:

1. நான் எனக்கும் எனது இரண்டு பிள்ளைகளுக்கும் பராமரிப்புக்கோரி எதிர்மனுதாரருக்கு எதிராக ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றை செய்துள்ளேன்.

2. குறித்த விண்ணப்பம் தொடர்பான விசாரணையின் இறுதியில் நீதிமன்றம் எதிர்மனுதாரரை, எனக்கும் எனது இரண்டு பிள்ளைகளுக்கும் பராமரிப்பு தொகையை செலுத்தும்படி 2008ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் நாள் கட்டளை பிறப்பித்தது.

3. 2008ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் நாள் நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் குறித்த காலப்பகுதியில் இருந்து எனக்கு மாதாந்தம் ரூபா நான்காயிரமும் (ரூபா: 4,000/=) செலுத்தும்படி நீதிமன்றம் எதிர்மனுதாரருக்கு உத்தரவு இட்டது.

4. குறித்த கட்டளையின் பிரகாரம் எனது . இரண்டு பிள்ளைகளுக்கும் தலா ரூபா இரண்டாயிரத்து ஐநூறு (ரூபா: 2,500/=) வீதம், மாதாந்தம் ரூபா ஐந்தாயிரம் (ரூபா: 5,000/=) மொத்த பராமரிப்பு தொகையாக செலுத்தும்படி நீதிமன்றம் எதிர்மனுதாரருக்கு உத்தரவு இட்டது.

5. குறித்த கட்டளையின் பிரகாரம் எதிர்மனுதாரர் தொடர்ச்சியாகவும் ஒழுங்காகவும் எனக்கு மொத்த பராமரிப்புத் தொகையாக மாதாந்தம் ரூபா ஒண்பதாயிரம் (ரூபா: 9,000/=) செலுத்தி வருகின்றார்.

6. ஆனால் வாழ்க்கைச் செலவு மற்றும் பிள்ளைகளின் கல்விச் செலவு என்பவற்றின் அதிகரிப்பு காரணமாக தற்போது செலுத்தப்பட்டுவரும் பராமரிப்பு தொகை எமது நாளாந்த வாழ்க்கையை கொண்டுநடாத்த போதுமானவையாக இல்லை.

7. எதிர்மனுதாரர் தற்போது கடல் தொழில் செய்து வருவதன் மூலம் அவர் ரூபா முப்பாயிரத்துக்கு (ரூபா 30,000/=) மேல் மாதாந்தம் வருமானத்தை பெற்றுவருகின்றார்.

8. எனவே மேலே சொல்லப்பட்ட நிகழ்வுகளின் பிரகாரம குறித்த பராமரிப்பு தொகையை அதிகரித்துச் செலுத்தும்படி எதிர்மனுதாரரை கோருவதற்கு எனக்கு நியாயமான காரணங்கள் உண்டு என்றும் நான் கூறுகின்றேன்.

9. எனவே எனது மனுவில் நான் கோரியுள்ளவாறு குறித்த பராமரிப்பு தொகையை அதிகரித்துச் செலுத்தும்படி எதிர்மனுதாரருக்கு கட்டளையிடுமாறு நான் நீதிமன்றத்தை கோருகின்றேன்.

10. மேலே சொல்லப்பட்டவை நான் அறிந்தவரையிலும் எனது அறிவுக்கு எட்டியவரையிலும் உண்மையானவை இத்தால் உறுதி செய்கின்றேன.

..................................

மேற் சொன்ன சத்தியக் கூற்றை வெளிப்படுத்துபவர் வாசித்து விளக்கி அதிலுள்ள விடயங்கள் அனைத்தும் உண்மையானது என என் முன்னிலையில உறுதி செய்து 2011ம் ஆண்டு .................. மாதம் .... ம் நாள் திருக்கோணமலையில் வைத்து அவரால் இதில் கையொப்பம் இடப்பட்டது.

வெளிப்படுத்துபவர்

என் முன்னிலையில்

சமாதான நீதிவான்/
சத்திய பிரமாண ஆணையாளர்

CPPHR

Centre for the Promotion and Protection of Human Rights

**NO: 238,**

**INNER HARBOUR ROAD,**

**TRINCOMALEE**